Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 22, 2024

வெள்ளிக்கிழமை நவம்பர் 22, 2024 | ஒளி: 10 கதிர்: 098 | பக்கம்:11 | நகரப்பதிப்பு | FREE

## நாளை முதல் தவணை விடுமுறை

2024 ஆம் ஆண்டில், அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கான மூன்றாம் பாடசாலை தவணையின் முதல் கட்டம் 2024 நவம்பர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

அரசியலில் இனிமேல்

# “இனவாதத்துக்கு இடமில்லை”



- சுதந்திரம் அனைவருக்கும் பொதுவானது
- IMF உடன் வெள்ளியன்று உடன்பாடு
- பொருட்கள், சேவைகளின் உற்பத்தியை மேம்படுத்துதல்
- மீன்பிடி தொழிலுக்கு சலுகைகள்
- சட்டத்துக்கு மேல் யாருமில்லை
- டிஜிட்டல் இலங்கைக்கு உறுதி
- தூய்மையான இலங்கைக்கு செயலணி
- அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிக்கப்படும்
- புத்தகங்களை கொள்வனவுக்கு கொடுப்பனவு
- அரச ஊழியர்களுக்கு நியாயமான சம்பள அதிகரிப்பு
- விசேட தேவையுடையவர்களுளை கவனிக்க அமைப்புகள்

தேசிய செல்வத்தின் பலன்கள் நியாயமாக மக்களைச் சென்றடைய வழி சமைக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, நான் உட்பட எவரும் சட்டத்துக்கு மேல் செல்லமுடியாது. என்பதுடன்,

அரசியலில் இனிமேல் இனவாதத்திற்கு இடமில்லை என்றார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (22) சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்தில் ஒரு உடன்பாடு எட்டப்படலாம் என்று கூறிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சுதந்திரம் அனைவருக்கும் பொதுவானது என்பதுடன், இனவாதத்திற்கு இடமளிக்கப் போவதில்லை என்றார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை மிகவும் எளிமையான முறையில், வியாழக்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பித்து வைத்து, உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது முழு உரை (பக்கங்கள், 08,09,10)

## சபாநாயகர் கலாநிதி அசோக ரங்வல

பிரதி சபாநாயகர்: டொக்டர் மொஹமட் ரிஸ்வி சாலி

குழுக்களின் பிரதித் தலைவர்: ஹேமலி விரசேகர








நாட்டின் புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பியான கலாநிதி அசோக ரங்வல நியமிக்கப்பட்டுள்ளதுடன், பிரதி சபாநாயகராக கொழும்பு மாவட்ட எம்.பியான டொக்டர் மொஹமட் ரிஸ்வி சாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு வியாழக்கிழமை (21) காலை 10 மணிக்கு ஆரம்பமானதைத்தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கூட்டும் ஜனாதிபதியின் பிரகடனத்தைப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர சபையில் வாசித்தார்.

தொடர்ச்சி P2

## சபை முதல்வர் பிமல்; பிரதம கொறாடா நளிந்த

நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர், வியாழக்கிழமை (21) நடைபெற்றது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அக்கிராசன உரைக்கு முன்னதாக, நடைபெற்ற அமர்வில், சபை முதல்வராக பிமல் ரத்நாயக்க நியமிக்கப்பட்டார். அத்துடன், அமைச்சர் நளிந்த



ஜயதிஸ்ஸ ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 29 பிரதியமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, 29 பிரதியமைச்சர்கள், வியாழக்கிழமை (21) மாலை நியமிக்கப்பட்டனர்.

பேராசிரியர். அனில் ஜயந்த பெர்னாண்டோ பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

2 நாமல் கருணாரத்ன விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர்

3 வசந்த பியதிஸ்ஸ கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

4 நளின் ஹேவகே தொழிற்கல்வி பிரதி அமைச்சர்

5. ஆர்.எம்.ஜயவர்தன வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

6. கமகெதர திஸாநாயக்க புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

தொடர்ச்சி P2

## எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்தில் அமர்ந்த இராமநாதன் அர்ஜுனா



நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு, வியாழக்கிழமை(21) கூடியது. இந்நிலையில், எதிர்க்கட்சி பக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் வழமையாக அமரும் ஆசனத்தில் சபை கூடுவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்னரே யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு எம்.பியான டாக்டர் இராமநாதன் அர்ஜுனா வந்து அமர்ந்திருந்தார்.

தொடர்ச்சி P2

## டக்ளஸுக்கு பிடியாணை

வழக்கு ஒன்றில் சாட்சியமளிக்க நீதிமன்றில் ஆஜராகாத முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, வியாழக்கிழமை(21) பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனோகரன் என்ற வர்த்தகர் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான காசோலைகளை வழங்கி மோசடி செய்ததாக டக்ளஸ் தேவானந்தா செய்த முறைப்பாட்டின் பிரகாரம், அவர் (டக்ளஸ் தேவானந்தா) நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் இந்த பிடியாணையைப் பிறப்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## புதிய சபாநாயகர் மீது சஜித் நம்பிக்கை

புதிய சபாநாயகர் பாரபட்சமின்றி, வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்வார் என நம்பிக்கை கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

10ஆவது பாராளுமன்றத்தின் புதிய அமர்வு வியாழக்கிழமை (21) கூடிய நிலையில், சபாநாயகராக நியமிக்கப்பட்ட கலாநிதி அசோக சபுமல் ரன்வலவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து



உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் பேசுகையில்,

தொடர்ச்சி P2

## “மக்கள் ஆணைக்கு எதிரான செயல்பாடு”

தற்போதைய அரசாங்கம் தேர்தல் மேடைகளில் முன்வைத்த சில விடயங்கள் இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களோடு ஒப்பிடும் போது முரண்பாட்டைக் காண்பிக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டில் இருதரப்பு கடன்கள், பிணை முறிப் பத்திரக் கடன்கள் போன்றவற்றில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்துச் செவிமடுத்த போது ஒருவித அதிர்ச்சிக்கு ஆளானோம். ஏலவே இணக்கப்பாடு காணப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை மாற்றி புதிய ஒப்பந்தத்தை எட்டுவதாக தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தல் மேடைகளில் பிரஸ்தாபித்தனர்.

தொடர்ச்சி P2

## உணவு ஒவ்வாமையால் 9 சிறுமிகள் பாதிப்பு

தலத்துஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹரகமவில் உள்ள பெண்கள் தடுப்பு முகாமில் இருந்த 09 சிறுமிகள் உணவு ஒவ்வாமை காரணமாக கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சோறுடன் மரவள்ளிக்கிழங்கைச் உட்கொண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக சிறுமிகள் புதன் (20), வியாழக்கிழமைகளில்(21) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகயீனமுற்ற சிறுமிகள் 15-17 வயதுடையவர்கள் என தெரிவித்த தலத்துஓயா பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## “நினைவேந்தல் நிகழ்வுக்கு அனுர இடமளிப்பார்”

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லமான கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவிருக்கிறது. அதற்கு ஆளும் அனுர அரசு நிச்சயமாக இடமளிக்கும் என நம்புகிறோம் என அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழு நடாத்திய ஊடக சந்திப்பில் பணிக்குழுவின்

தலைவர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் மற்றும் செயலாளர் நாகமணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சமூக செயற்பாட்டாளர் இரா.பிரகாசின் இல்லத்தில் அவரது ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.




மேலும் அவர்கள் தெரிவிக்கையில்,

“அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக் குழுவில் நாங்கள் 12 உறுப்பினர்கள் இருக்கின்றோம் .கடந்த காலங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் சிறப்பாக கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் பல தடைகளுக்கு மத்தியில் நடாத்தி வந்தோம்.

தொடர்ச்சி P2

# 29 பிரதியமைச்சர்கள் நியமனம்

7 சட்டத்தரணி டி.பி.சரத் வீடமைப்பு பிரதி அமைச்சர்
8. ரத்ன கமகே மீன்பிடி, நீரியல் மற்றும் பெருங்கடல் வள பிரதி அமைச்சர்
9 மஹிந்த ஜயசிங்க, தொழிலாளர் பிரதி அமைச்சர்
10 அருண ஜயசேகர பாதுகாப்பு பிரதி அமைச்சர்
11 அருண் கேமச்சந்திர வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்
12 அன்டன் ஜெயக்கொடி சுற்றாடல் பிரதி அமைச்சர்
13 முகமது முனீர் தேசிய ஒருமைப்பாடு துணை அமைச்சர்
14 இன்ஜி.எரங்க வீரரத்ன டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்
15 ஏரங்க குணசேகர இளைஞர் விவகார பிரதி அமைச்சர்
16 சத்துரங்க அபேசிங்க கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்
17 பொறியியலாளர். ஜனித் ருவான்கொடித்துவக்கு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்
18 கலாநிதி நாமல் சுதர்சன பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்
19 ருவன் செனரத் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்
20 Dr.பிரசன்ன குமார குணசேன போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்
21 Dr.ஹன்சக விஜேமுனி சுகாதார மற்றும் ஊடக பிரதி அமைச்சர்
22 உபாலி சமரசிங்க கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்
23 ருவன் சமிந்த ரணசிங்க, சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர்
24 விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன
25 சுந்தரலிங்கம் பிரதீப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்
26 சட்டத்தரணி சுனில் வடகல பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்
27 கலாநிதி மதுர செவெவிரத்ன கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்
28 Dr. நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும
29 கலாநிதி காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க.

# எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்தில் அமர்ந்த இராமநாதன் அர்ஜுனா



அப்போது அது எதிர்கட்சித் தலைவருக்குரிய ஆசனம் என பாராளுமன்ற உதவியாளர்களினால் அர்ச்சுனாவுக்கு கூறப்பட்டபோதும், அதிலிருந்து எழுந்திருக்க மறுத்த அவர், வியாழக்கிழமை (21) எந்த ஆசனத்தில் எவரும் அமர முடியுமென கூறிய போது, எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்தில் பாராளுமன்ற சம்பிரதாயப்படி வேறு எம்.பிக்கள் அமருவதில்லை என பாராளுமன்ற உதவியாளர் தெளிவுபடுத்திய போதும், அர்ச்சுனா எம்.பி. எழும்ப மறுத்து அந்த ஆசனத்திலே அமர்ந்திருந்தார்.

அத்துடன், அர்ச்சுனா எம்.பிதான் சபையில் இருப்பதையும் தனது செல்போன் ஊடாக நேரலை செய்ததுடன் சத்தியப்பிரமாண ஆவணங்களையும் செல்போனில் படம்பிடித்துக் கொண்டிருந்தார்

இதனால் சபைக்குள் வந்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வேறு ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார்.

இந்நிலையில் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடியபோதும் அர்ச்சுனா எம்.பி எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்திலே மீண்டும் அமர்ந்திருந்தார். அப்போது அவரிடம் வந்த படைக்கல சேவிதரும் அது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனம் என்று கூறியபோதும் அவருடன் முரண்பட்டதுடன், ஆசனத்திலிருந்து எழுந்திருக்க மறுத்துவிட்டார்.

பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணாக செயற்பட்ட அர்ச்சுனா எம்.பியின் நடவடிக்கை ஏனைய எம்.பிக்களுக்கும் தெரியவரவே அவர்கள் இவரின் நடவடிக்கையைக் கேலியாகப் பார்த்துச் சிரித்தவாறு அமர்ந்திருந்தனர். அப்போது உள்ளே வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் வேறு ஆசனத்திலேயே அமர்ந்தார்.

# நாளை முதல் தவணை விடுமுறை

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளில் மூன்றாம் பாடசாலை தவணையின் முதல் கட்டம் 2024 டிசெம்பர் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும் மற்றும் அன்றைய திகதிக்குப் பிறகு பாடசாலை விடுமுறைகள் தொடங்கும்.

அனைத்துப் பாடசாலைகளிலும் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் 2025 ஜனவரி 02ஆம் திகதி மீண்டும் தொடங்கும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

# சபாநாயகர் கலாநிதி அசோக ரங்வல

இதனையடுத்து, அரசியலமைப்பின், 64(1) பிரிவு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 4,5 மற்றும் 6இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, முதலாவதாக சபாநாயகரின் தெரிவு இடம்பெற்றது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவால் புதிய சபாநாயகரைத் தெரிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டது. இதன்போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய, அசோக சபுமல்ரன்வல பெயரைப் முன் மொழிந்தார், அமைச்சர் விஜித ஹேரத் அதனை வழி மொழிந்தார்.இதேவேளை, வேறுஎவரின் பெயரும் அந்தப் பதவிக்குப் பரிந்து ரைக்கப்படாமையினால் வாக்கெடுப்பின்றி சபாநாயகராக அசோக சபுமல் ரன்வல ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகராக தெரிவான அசோக சபுமல் ரன்வலவை அவரின் ஆசனத்திற்குப் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் அழைத்துச் சென்றனர். அதனைத் தொடர்ந்து, சபாநாயகராகப் பதவியேற்ற பின்னர் புதிய எம்.பிக்களுக்கான சத்தியப்பிரமாணம் நடைபெற்றது.

இதன் பின்னர், பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்யுமாறு சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். இவ்வேளையில், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான டொக்டர் மொஹமட் ரிஸ்வி சாலியின் பெயரை. முன்மொழிந்தார் அதை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் வழிமொழிந்தார்.

இந்தப் பதவிக்கு வேறு எவரின் பெயரும் பரிந்துரைக்கப்படாமையினால் டொக்டர் மொஹமட் ரிஸ்வி சாலி பிரதி சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரைத் தெரிவு செய்யுமாறு சபாநாயகர் கோரினார். கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேமலி வீரசேகரவின் பெயரை அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி முன்மொழிந்தார். பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க அதனை வழிமொழிந்தார்.

இதன்படி, ஹேமலி வீரசேகர அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

அத்துடன், சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக நலிந்த ஜயதிஸ்ஸவும் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவை ஏற்றுக்கொள்வதாக அறிவித்த சபாநாயகர் அவரை, வரவேற்பதாக அறிவித்தார்.

பின்னர் புதிய சபாநாயகருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றினர். ஏனையவர்களும் சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவிக்க எழுந்தபோதும் நேரப் பிரச்சினை காரணமாக அதற்கு அனுமதி வழங்கமுடியாததுள்ளதாகத் தெரிவித்த சபாநாயகர், அனைவரினதும் வாழ்த்துக்களைத் தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, முற்பகல் 10.30 மணியளவில் பாராளுமன்றம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு, முற்பகல் 11.30 மணிக்கு சபை மீண்டும் கூட்டப்பட்டு ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்பட்டது.

இதனையடுத்து, சபை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி காலை 9.30 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

# புதிய சபாநாயகர் மீது சஜித் நம்பிக்கை



சபாநாயகராக அவருக்குப் பல முக்கிய பொறுப்புகள் காணப்படுகின்றன.

சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், 225 உறுப்பினர்களும் பொது மக்கள் சேவைக்காக அவர்கள் ஆற்ற வேண்டிய சேவைகளில் தங்கள் பங்கைச் சரியாகச் செய்வதற்கும், புதிய சபாநாயகர் பக்கச்சார்பற்றவராகவும் வெளிப்படைத்தன்மையுடனும் கருமம் ஆற்ற வேண்டும்.

அதேபோல், புதிய சபாநாயகரின் பொறுப்பையும் கடமையையும் அரசியலமைப்பிற்கு உட்பட்டவாறு, சட்டப்பூர்வமாக நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் முன்கொண்டு செல்வதற்கு இயலுமை கிடைக்கட்டும் என்றார்.

# “மக்கள் ஆணைக்கு எதிரான செயல்பாடு”

ஆனால், அரசு தற்போது அதில் இருந்து விலகிச் செயல்பட்டு வருகிறது. இது பாரதூரமான விடயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அக்கிராசன உரை தொர்பில், பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் வைத்து, ஊடகங்களுக்கு வியாழக்கிழமை (21) கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது, நாட்டு மக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் ஆணையை வழங்கியுள்ள நிலையில், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் உள்ள மக்களுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் விடயங்களுக்குத் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பின்பற்றிய செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கமும் இவ்விவகாரத்தில் பின்பற்றி வருவதாகத் தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை அமுல்படுத்த வேண்டாம் என்றே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணையைப் பெற்றுத் தந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் சட்டகத்திற்குள் இருந்தவாறு உடன்பாடு காணப்பட்டுள்ள இணக்கப்பாட்டை மக்களுக்கு சாதகமாக மாற்றுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் தெரிவித்தது.

ஆனால், இன்று தற்போதைய அரசாங்கம் இந்த இணக்கப்பாட்டை முன்னர் இருந்தவாறு பழைய வழியிலேயே முன்னெடுத்துச் செல்வதைக் காணமுடிகிறது. வறுமையை ஒழித்து, கர்ப்பிணி தாய்மார்கள், சிசுக்கள் மற்றும் சிறுவர்களுக்கான திட்டத்தை முன்னெடுத்து, ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்கி, தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் விதமாகவும், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையினருக்கு பல்வேறு ஏற்றுமதி சந்தைகளில் சிக்கல்கள் இருந்தாலும், அவற்றை நீக்குவதற்கு ஏற்றாற் போலான இணக்கப்பாட்டை நாம் காண்போம் என தெரிவித்திருந்தோம். இந்த அரசாங்கமும் மேற்குறித்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். இவற்றை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நாம் இந்த அரசாங்கத்திற்கு எமது ஆதரவை நல்குவோம் என்றார்.

# “நினைவேந்தல் நிகழ்வுக்கு அனுர இடமளிப்பார்”

அந்தவேளை, சில அரசியல்வாதிகள் அழைக்காமல் வந்து இந்த நிகழ்வை நாங்கள் தான் செய்கிறோம் என்று தம்பட்டம் அடிப்பார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிள் காரர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை வந்தடைந்து இதனை செய்வார்கள்.

கடந்த வருடம் ஒரு நபரை (பிரபா) வைத்து இந்த மாவீரர் துயிலுமில்லை, நினைவேந்தலைக் குழம்பினர்.

அதனால் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. 27ஆம் திகதி நினைவேந்தல் செய்வதற்கு சிரமதானம் செய்து ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, இந்த அரசியல் கட்சிகள் வந்து பொய்யான அரசியல் பிரசாரங்கள் செய்வதை முழுமையாக நிறுத்த வேண்டும்.

உங்களுக்குத் தெரியும் இந்த கார்த்திகை மாதம் என்றாலே எங்களுக்கு ஞாபகம் வரும் கார்த்திகை 27 இது எக்காலத்திலும் எத்தனை தலைமுறைகள் வந்து போனாலும்




எத்தனை மாதங்கள் நாங்கள் கடந்து சென்றாலும் எங்களது நெஞ்சில் ஆறாத வடுவாக எங்களது உள்ளத்தைப் போட்டு குடைந்து கொண்டு வருத்திக்கொண்டு எங்களைத் தினம் தினம் எங்களை வேதனைப்படுத்திக் கொண்டு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் விடயம். எங்களது மாவீரர்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்களது மண்ணுக்காகத் தமிழ் இனத்திற்காக உங்களது தமிழ் அது வாழ்வியல் மொழி வழி தேசியம் இருப்பு போன்றவற்றைப் பாதுகாப்பதற்காக ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் எங்களது அண்ணன், தம்பியாக சகோதரிகளாக நாங்கள் இழந்திருக்கின்றோம்.

இந்த மண்ணுக்கு விதையாகி இருக்கின்றார்கள். ஆகவே, இந்த மாவீரர் துயில்கின்ற இடத்தில் மாவீரர் நினைவு நாளான கார்த்திகை 27 அண்மையில் வர இருக்கின்றது.

இதனை அம்பாறை மாவட்டத்தில் வழி நடத்துவதற்கும் இதனை சிறப்பாக நடத்துவதற்கும் எங்களது மக்களுக்குத் தலைமை தாங்குவதற்கும் மாவீரர் துயிலுமில்லை பணிக்குழு தலைவர் செயலாளர் அதாவது நாங்கள் இருக்கின்றோம். கடந்த ஏழு எட்டு வருடங்களாக செய்கிறோம்.

ஆகவே, இந்த மாவீரர் தினமானது ஒவ்வொரு வீடுகளிலும் எங்களது தமிழ் உள்ளங்களிலும் அன்றைய நாள் ஒரு எழுச்சி நாளாக எங்களது உறவுகளுக்கு நாங்கள் ஒரு அனுதாபத்தையோ அஞ்சலியையோ நாங்கள் வீடுகளில் இருந்தாவது செய்ய வேண்டும்.

இந்த வருடமும் நாங்கள் அந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எதிர்வரும் கார்த்திகை 27 அன்று நாங்கள் அந்த புண்ணிய பூமியில் எங்களது தமிழ் இறந்த உறவுகள் எங்களது சரீரத்தின் ஒரு பாகமாக எங்களுக்காக மண்ணில் மடிந்த மாவீரர்களை நாங்கள் நினைவு கூருவதற்குக் காத்திருக்கின்றோம். மக்களாக எங்களோடு ஒன்று சேருங்கள்” என குறிப்பிட்டுள்ளனர்.

# டக்ளஸுக்கு பிடியாணை

இந்த வழக்கு, இரகசிய பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா நோய்வாய்ப்பட்டிருப்பதால் அவர் நீதிமன்றில் ஆஜராக மாட்டார் என அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

சுகவீனம் தொடர்பான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையைச் சேர்ந்த தொழிலதிபர் சுப்பிரமணியன் மனோகரன் என்பவர், 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி அல்லது அன்றைய தினத்தில் கணக்கில் பணம் இல்லை என்பதை அறிந்து தலா பத்து மில்லியன் ரூபாய் காசோலைகளை வழங்கி மோசடி செய்ததாக, அவருக்கு எதிராக டக்ளஸ் தேவானந்தவால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வழக்கின் முதல் சாட்சியான தேவானந்தாவுக்கு சாட்சியமளிப்பதற்கான கடைசித் திகதி வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சம்பத் ஹேவாபத்திரன நீதிமன்றில் தெரிவித்தார்.

இரு தரப்பையும் பரிசீலித்த மாஜிஸ்திரேட், சாட்சிக்கு பிடியாணை பிறப்பித்து, விசாரணையை ஜனவரி 23ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு

# எளிமையாக நடைபெற்றது

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வும் ஜனாதிபதியின் பாராளுமன்ற வருகையும் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றன.

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு வியாழக்கிழமை (21) முற்பகல் 10 மணிக்கு கூடியது. பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தலைமையில் பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதுடன், அதன்பின்னர் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் நியமனங்களின் பின்னர். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைக்காகப் பாராளுமன்றம் தற்காலிகமாக 1 மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

அதன்பின்னர் ஜனாதிபதியை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. முற்பகல் 11.10 மணிக்கு பாராளுமன்ற கட்டிடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் சபாநாயகரின் வருகையைத் தொடர்ந்து பிரதமரின் வருகை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து 11.20 மணியளவில் பாராளுமன்றத்திற்கு



ஜனாதிபதி வருகை தந்தார். அவரை சபாநாயகரும், பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற கட்டிடத்தின் பிரதான படிக்கட்டுகளுக்கு அருகில் வரவேற்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்வானது ஆடம்பரமின்றி எளிமையான முறையில் நடத்தப்பட்டது. வழமையாக முதலாவது கூட்டத் தொடர் ஆரம்பிக்கும்போது, ஜனாதிபதியின் வருகையின் போது, நடத்தப்படும் முப்படையின் மரியாதை அணிவகுப்பு, வாகன பேரணி மற்றும் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படுதல் ஜயமங்கல கீதம் இசைத்தல் என்பன இம்முறை இடம்பெறவில்லை.

பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் தனது வாகனத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி அவரின் வாகனத்திலிருந்து அவரே கதவைத் திறந்து இறங்கினார். வழக்கமாக ஜனாதிபதி ஒருவரின் மெய் பாதுகாவலர்களே வாகனக் கதவைத் திறந்து விடுவார்கள், மரியாதையும் செலுத்துவார்கள், ஜனாதிபதியின் பாதிரியார் வருவராயின், அவர் அமர்ந்திருக்கும் பக்கத்துக்கும் சென்று வாகன கதவைத் திறந்துவிடுவார்கள்.

வாகனத்திலிருந்து இறங்கிய ஜனாதிபதியை படைக்கலசேவிதர், பிரதி படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர் வரவேற்று முன்செல்ல சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன் பின்னர் உடையணி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜனாதிபதி பின்னர் பாரம்பரியத்துக்கு அமைய செங்கோலைக் கையில் தாங்கியவாறு படைக்கல சேவிதர், பிரதிப் படைக்கல சேவிதர், ஆகியோர் முன் செல்ல ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் உதவிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் வருகை தந்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அக்கிராசனத்தில் இருந்து அரசாங்க கொள்கைப் பிரகடன உரையை மேற்கொண்டார். 11.31 மணியளவில் தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி நண்பகல் 12.23 மணியளவில் உரையை நிறைவு செய்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைக் கேட்பதற்காக வெளிநாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள்,மாகாண ஆளுநர்கள் உள்ளிட்ட பெருமளவானவர்கள் சபாநாயகர் கலரியில் மக்கள் கலரியும் நிறைந்திருந்தது.

# மட்டக்களப்புக்கு சீனத் தூதுவர் விஜயம்



வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென்ஹொங்கிற்கும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தினருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று புதன்கிழமை (20) மாலை மட்டக்களப்பு பாசிக்குடாவில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமாங்கராஜா தலைமையில் தூதுவரைச் சந்தித்த குழுவினர் மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை, உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம் முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு சீனாவில் ஊடகத்துறை சார்ந்த புதிய தொழில் நுட்ப பயிற்சியைப் பெற்றுக் கொடுக்குமாறு சிவில் சமூகத்தினர் தூதுவரிடம் விடுத்த வேண்டுகோள் விடுத்தனர். அதற்குப் பதிலளித்த தூதுவர் இது மிகவும் வரவேற்கத்தக்க விடையம் இதனைத் தான் முன்னின்று செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதில் நீண்டகால மற்றும் குறுகிய கால திட்டங்கள் என பல அடங்குவதுடன், கல்வித்துறை, மருத்துவத் துறை, தொழில் துறை, தொழில் பயிற்சி வழங்குதல், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரம் அபிவிருத்தி, மாணவர்கள் பாடசாலை இடைவிலகல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விசேட தேவையுடைய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுகள் தொடர்பான பல விஷயங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, சீனத்தூதுவர் தற்போது இலங்கைக்கு 1.5 பில்லியன் நிதி வழங்கியுள்ளதுடன் கொவிட் தொற்று பாதிப்புற்றிருந்த காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளை வழங்கியதாகவும், கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் பல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதும், பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட போது கிழக்கு மாகாண மக்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டதையும், அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சீருடை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டதாகவும் இதன் போது தூதுவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் சீன தூதரக அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவங்கேணி பிரதேசத்தில் சீன அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் சீன தூதுவரினால் வியாழக்கிழமை(21) கையளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சீனாவிலிருந்து நிதி நன்கொடை



அபு அலா

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் சீன மக்கள் குடியரசின் தூதுவர் கீய் சென்ஹோங்க்கு (Qi Zhenhong) இடையிலான கலந்துரையாடல் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்றது.

கடந்த 18 ஆம் திகதி கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில், தூதுவரைச் சந்தித்த ஆளுநர் விடுத்த அழைப்பை ஏற்று கீய் சென்ஹோங்க்கு கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 08 மில்லியன் ரூபாய் நிதியை நன்கொடையாக சீனத் தூதுவர் வழங்கி வைத்து, மாகாண அபிவிருத்திக்குத் தேவையான சகல உதவிகளையும் சீன அரசாங்கம் தொடர்ந்து வழங்கும் எனவும் சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணம் உட்பட இலங்கைக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு புதிய அரசாங்கமும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட கிழக்கு மாகாண ஆளுநரும் கடுமையாக உழைப்பார்களெனத் தான் உறுதியாக நம்புவதாக சீனத் தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதற்குத் தேவையான ஆதரவை வழங்க, சீன அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை ஹிங்குரான சீனி தொழிற்சாலைக்கு சீனாவின் தொழில்நுட்ப உதவியை சீன அரசாங்கம் ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் யுனான் மாகாணத்திற்கும் இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கும் இடையில் பல்வேறு துறைகளில் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தனது அழைப்பை ஏற்று வருகை தந்த தூதுவருக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், கிழக்கு மாகாணம் பல்லின மக்கள் வாழும் மாகாணமாக இருப்பதால், அதன் தேசிய ஒருமைப்பாடும், வேற்றுமையும் எமது பலமாகும் எனவும் சீன அரசாங்கத்தின் ஆதரவு தொடர்ச்சியாகத் தேவைப்படுவதாகவும் மாகாணத்தின் திட்டங்களுக்கு சீனாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் ஆளுநருக்கும் சீன தூதுவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்டத்திற்கு தெரிவு

எம்.யூ.எம்.சனூன்



கற்பிட்டி பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 06 ல் கல்வி பயிலும் முஹம்மது நதீம் சோபியா மனால் தேசிய சதுரங்க சம்மேளனத்தினால் நாத்தாண்டிய பாடசாலையில் இடம்பெற்ற மாகாண மட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் றிஸ்கான் தெரிவித்துள்ளார்.

மேலும், இம்மாணவிக்கு பாடசாலை சார்பாக ஆசிரியர்களின் பங்களிப்புடன் பரிசு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# வடை சாப்பிட்ட நபர் மரணம்

வடை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, ஏற்பட்ட இருமல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அதுரகிரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அதுரகிரிய பொரலுகொட வீதியை சேர்ந்த அனுர சம்பத் அமரசேகர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்தினருடன் உணவு உட்கொண்டிருந்த நிலையில் குறித்த நபர் வடை சாப்பிட்டுள்ளதுடன், இதன்போது திடீரென இருமலுடன் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள தாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.







# ஆங்கில இலக்கிய மன்ற நிகழ்வு

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த ஆங்கில இலக்கிய மன்றத்தின் நிகழ்வு, கல்லூரி அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் செவ்வாய்க்கிழமை (19) கல்லூரியில் நடைபெற்றது.













# இழுபறி தொடரும் தேசியப் பட்டியல் நியமனம்

பொதுத் தேர்தல் நடந்து முடிந்து, 10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது ஒன்றுகூடல் நேற்றைய தினம் எளிமையான நிகழ்வுகளுடன் ஆரம்பமாகியிருந்த நிலையில், பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாக அங்கம் வகிப்பதற்காகத் தேசியப் பட்டியலினூடாக ஆசனம் வழங்குவது தொடர்பில் சில பிரதான கட்சிகளிடையே இன்னமும் இழுபறி நிலவுவதைக் காண முடிகின்றது.

இலங்கை தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன மற்றும் சர்வஜன பலய ஆகியன தமது தேசியப் பட்டியல் அங்கத்தவர்களை ஏற்கெனவே பெயரிட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி தமக்குக் கிடைத்த ஐந்து ஆசனங்களில், ஒன்றுக்கான பெயரை மட்டுமே வெளியிட்டுள்ளது. எஞ்சியிருக்கும் நான்கு ஆசனங்களுக்கு யாரைப் பெயரிடுவது என்பது தொடர்பில் கட்சிக்குள்ளேயும், கூட்டுக் கட்சிகளிடமிருந்தும் கடும் அழுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் பீடத்துக்கு வழங்கப்பட்ட வண்ணமுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் சார்பாக ரவி கருணாநாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. எஞ்சியிருக்கும் ஒரு ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இழுபறிகள் நடப்பதை அவதானிக்க முடிகின்றது.

தேசியப் பட்டியல் என்பது என்ன என்பதைப் பார்த்தால், நேரடி வாக்குகளின் மூலமாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாக முடியாத நபர்களுக்கு, குறிப்பாக துறைசார் நிபுணர்கள், புத்திஜீவிகள் போன்ற சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் நபர்களுக்குப் பாராளுமன்றத்துக்குப் பிரவேசிப்பதற்கு வாய்ப்பை வழங்கும் முறையாக அமைந்துள்ளது. ஆனாலும், காலப்போக்கில் கட்சிகளின் நலன் விரும்பிகளுக்குப் பாராளுமன்றம் பிரவேசிப்பதற்கான ஒரு கருவியாக இந்த தேசியப் பட்டியல் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவர்களுக்கும் மக்கள் ஆணையை மீறி, மீண்டும் பாராளுமன்றத்துக்குச் செல்ல வாய்ப்பை வழங்குவதைக் கடந்த காலங்களைப் போன்று, இம்முறையும் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக, பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தியும் அவ்வாறான இருவரை தமது 19 பேர் அடங்கிய தேசியப் பட்டியலில் சேர்த்துள்ளது.

இது தவறல்ல, ஆனாலும் தேசிய பட்டியல் எனும் முறைமை உருவாக்கத்துக்கு ஒரு காரணி இருந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நியமனம் அமைந்திருந்தால், அதனை ஏற்றுக் கொள்ள முடியும். குறிப்பாகப் புதிதாக வருவோருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படுவது சிறந்தது.

ஏற்கனவே பல தடவைகள் பாராளுமன்றம் சென்றும், அதனூடாக கிடைக்கும் வரப்பிரசாதங்களை அனுபவித்தும், தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு சொல்லுமளவுக்குப் பெரிதாக எக்காரியங்களையும் நிறைவேற்றாது, தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெறாதவர்கள், பின் வழியாக மீண்டும் பாராளுமன்றம் செல்ல முனைவது எதற்காக? மக்களுக்குச் சேவையாற்றியிருந்தால், மக்கள் ஆணை கிடைத்திருக்கும். மக்களுக்குச் சேவை கிடைக்காமையால், வாக்குகள் கிடைக்கவில்லை. எனவே, மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்பதே, உண்மையான தலைவனுக்கு அடையாளம். அதற்கு ஒரு உதாரணத்தை இம்முறை வடக்கில் காண முடிந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தனது வீடு, கிராமம், நகரம் எனும் எண்ணங்களில் மட்டும் அடைபட்டுக்கிடக்கும் மக்கள், அந்த வட்டத்தில் இருந்தும் பார்க்காது, பரந்தளவில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தியே ஆகவேண்டும்.

உலகம் பரந்தது; கல்வி, கேள்வி எனும் கொடைகளை அனைவரும் பகர்ந்து கொள்வதால், உலகமே நமது வீடு போலாகிவிட்டது.

மக்களுடன் இணைந்து வாழ்வதே முழுமை பெறும். எனினும், அறியாமை காரணமாக, அநேகர் விலகி வாழ்வதுண்டு. ஒரு வட்டத்துக்குள் சுருங்கும் நிலை வரலாகாது.

நாடுகள் பூராவும் உறவுகள், நட்புகளை விஸ்தரிக்க வேண்டும். அதற்கான வழிகள், வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தொழில்நுட்பங்கள் மூலம் இதனை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

இன்று பலநாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் எமது சொந்த நாட்டில். கிளைகள் உருவாக்கப்படுகின்றன. நாங்கள் எவ்வளவுதான் முன்னேறினாலும், எங்கள் பாரம்பரியங்கள், கலாசார ஒழுக்க நெறிகள், கலைகள், பண்புகளை விலக்கி வாழக்கூடாது. எமது சொந்த மண் எமக்கு உரித்தானது. பழமையின் வேர்கள் அழியாதவை, ஸ்திரமானவை. உணர்க!

நன்றி – பருத்தியூர் பால.வயிரவநாதன்

## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின்-27

# அபிவிருத்தி வழி சமாதானம்-5



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

2002 ஆரம்பமான சமாதான முன்னெடுப்புகள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கவனம் செலுத்த வேண்டிய அடிப்படைப் பிரச்சினைகளைத் தவிர மற்ற கேள்விகளைச் சுற்றி உருவாகின.

குறிப்பாக இனப்பிரச்சினைக்கு அவசியமான அரசியலமைப்பு மற்றும் கட்டமைப்பு சார் திருத்தங்கள், சிறுபான்மையினர் உரிமைகள் குறித்துக் கவனம் செலுத்துவதைத் தவிர்த்தன. ‘அபிவிருத்தி வழி தீர்வை எட்டுதல்’ என்பதே தாரக மந்திரமாக இருந்தது.

இது தமிழர்களின் குறைகளை அரசியலற்றதாக்கி, சர்ச்சைக்குரிய அரச சீர்திருத்தங்களின் தேவையைக் குறைக்கும் என்ற அனுமானத்தின் கீழ், போர்களை நிறுத்துதல் மற்றும் வாழ்வாதார புனரமைப்புக்கு நிதியுதவி செய்வதன் மூலம் அன்றாட வாழ்க்கையைச் சீராக்குவதற்கான ஒரு மூலோபாயத்தை இலங்கை அரசாங்கம் பின்பற்றியது.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் தனியான அரச நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம், அதிகாரப் பகிர்வை நிறுவனமயப்படுத்தும் உத்தியைப் பின்பற்றி அதன் மூலம் சம்பாதித்த இறைமையின் அடிப்படையில் உள்ளக அல்லது வெளி சுயநிர்ணயத்திற்கான நியாயத்தை உருவாக்க முனைந்தனர். இந்த அர்த்தத்தில், இரண்டு அரங்காடிகளும் தங்கள் மூலோபாய நலன்களைத் தொடர போர் நிறுத்த உடன்படிக்கை உருவாக்கிய ‘போருமில்லை சமாதானமுமில்லை’ என்ற சூழ்நிலையைப் பயன்படுத்தினர். சமாதான செயல்முறையை வேறு வழிகளில் போரின் நீட்டிப்பாக மாற்றினர்.

இது இரண்டு அரசியல் அமைப்புகளுக்குள் அரசியல் மாற்றங்களுக்கு இணையான ஆனால் மிகவும் வேறுபட்ட தேவைகளுடன் ஒரு நடைமுறை இரட்டை அரசு கட்டமைப்பை உருவாக்கியது.

ஒருபுறம் இலங்கை அரசானது, ஒற்றையாட்சி மற்றும் மையப்படுத்தப்பட்ட அரசியலமைப்பிற்குள் பெரும்பான்மைவாதம் மற்றும் பல்வேறு வகையான தாராளவாத அரசியல் நடைமுறைகளால் வகைப்படுத்தப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த தேர்தல் ஜனநாயகம் என்று விவரிக்கப்படலாம். மறுபுறம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அரசைக் கட்டியெழுப்பும் திட்டத்தினூடு புலிகள் ஆளும் திறனை வெளிப்படுத்தினர்.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்களுக்கான ‘உள்ளக சுயநிர்ணயம்’ என்ற கருத்தின் அடிப்படையில் இலங்கைக்கான ஒரு கூட்டாட்சி மாதிரியை ஆராய்வதற்கான ஒப்பந்தத்தில் 2003இல் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கைச்சாத்திட்டன. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

விடுதலைப் புலிகள் பிரிவினைக்கு மாற்றாக உள்ளக சுயநிர்ணயத்தைக் கருத்தில் கொள்ளத் தயாராக இருப்பதாகவும், அதிகாரப் பகிர்வு மற்றும் அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களைப் பரிசீலிக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் இது சுட்டிக்காட்டியது.

எவ்வாறாயினும், 2003இல் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தின் பிரச்சினையில் பேச்சுவார்த்தைகள் ஒரு முட்டுக்கட்டையை எட்டியது.

இது சமாதான முன்னெடுப்புகளின் அரசியல் பாதிப்பை வெளிப்படுத்தியது. சமாதான முன்னெடுப்புகள் உள்நாட்டு அரசியல் நிலைமைகள் மற்றும் இயக்கவியல் ஆகியவற்றின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தது என்று முடிவு செய்யலாம். சமாதான முன்னெடுப்புகள் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இராணுவ அதிகாரச் சமநிலை மற்றும் சிங்கள பெரும்பான்மை அரசியலுக்குள் அரசியல் துண்டாடுதல் மற்றும் இனவழிப்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டது.

இந்த நிலைமைகள் ஒரு சமாதான செயல்முறையை உருவாக்கின. ஆனால், இது வேறு சில விளைவுகளையும் கொண்டிருந்தது. இச்செயன்முறை பங்குதாரர்கள் மற்றும் சிக்கல்கள் ஆகிய இரண்டிலும் குறுகியதாக வரையறுக்கப்பட்டது. இது விலக்கப்பட்ட அரங்காடிகளை உருவாக்கியது, எதிர்க்கட்சி அணிதிரட்டலுக்கான அரசியல் இடத்தை விரிவடையச் செய்தது. இது சமாதான முன்னெடுப்பில் அரசியல் செய்யக்கூடிய சிக்கல்களை உருவாக்கியது.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் எந்த மாதிரியான சமாதானத்தை நாடுகின்றன, விரும்பிய முடிவை நோக்கி செயல்முறையை இயக்கக்கூடிய அரசியல் இயக்கவியல் என்ன என்ற கேள்விகளை எழுப்பியது.

சமாதானம் பற்றிய அவர்களின் கருத்தாக்கம் உச்சரிக்கப்படாத நிலையில், இலங்கையின் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள சர்வதேச செயற்பாட்டாளர்கள் தாராளவாத சமாதான நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றி, ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் அரசியல் ஆணையையும் திறனையும் நம்பி, மோதலை அரசியலாக்கும் செய்வதற்கு போதுமான அரசியல் சலுகைகளை வழங்கினர்.

புலிகளை அரசியல் திசையில் மாற்ற வேண்டும் என்பது அவர்களது முக்கிய விருப்பாகவும் குறிக்கோளாகவும் இருந்தது. அதற்காகப் புலிகளுடன் மிகுந்த நெகிழ்வுத் தன்மையுடன் சர்வதேச சமூகம் நடந்து கொண்டது. இதை விடுதலைப் புலிகள் தவறாகப் புரிந்து கொண்டனர்.

இந்த நெகிழ்வுத் தன்மையானது தமது இராணுவ வாத வெற்றிகளின் பலன் என்பதாகவே அவர் கருதினர். இந்தத் தவறை அவர்கள் உணர்ந்தபோது, காலங் கடந்திருந்தது.

இன்று பின்னோக்கிப் பார்த்தால், இந்த மாதிரியானது சமாதான முன்னெடுப்புகளின் விலக்கப்பட்ட வடிவமைப்பால் மாற்றப்படுவதற்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட அரசியல் இயக்கவியலால் குறை மதிப்பிற்கு உட்பட்டது என்று முடிவு செய்யலாம்.

அரச சீர்திருத்தங்களின் முக்கியமான மற்றும் சர்ச்சைக்குரிய செயல்முறைகளில் இருந்து விலக்கப்பட்ட அரசியல் உயரடுக்குகள் மற்றும் சந்தை வழியிலான அபிவிருத்தியுடன் தொடர்புடைய சமூக ஒதுக்கீட்டை அனுபவித்த இடைநிலை சிங்கள வர்க்கங்கள் ஆகியன, சமாதான முன்னெடுப்புகளுக்கும், அரசாங்கத்திற்கும்,சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு வலுக்கட்டாயமாக எதிர்ப்புத் தெரிவித்தன. பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான அனைத்து அழுத்தங்களுக்கும் மத்தியில், அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் முதல் கட்ட பேச்சுவார்த்தைகளில் திட்டமிடப்பட்ட உத்தேச ஒன்பது சுற்றுகளில், ஆறு சுற்றுப் பேச்சுக்களை மட்டுமே நடத்த முடிந்தது.

துரதிர்ஷ்டவசமாக, முதல் கட்டத்தின் கடைசி மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள், பாதுகாப்புக் கவலைகள், வடக்கு மற்றும் கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் இரு தரப்புகளுக்குமிடையிலான சமத்துவ நிலைப் பிரச்சினை போன்ற பல விடயங்களைச் சுற்றி பேச்சுவார்த்தை நடத்தும் தரப்புகளுக்கிடையிலான முறுகல்களால் மறைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் நான்காவது சுற்றானது, முதலில் நிலவிய பேச்சுவார்த்தை நடத்தும் தரப்புகளுக்கு இடையிலான சுமூகமான உறவுகள் வறண்டு விட்டன என்பதை எடுத்துக்காட்டின.

கிழக்கில் முஸ்லிம்-தமிழ் உறவுகள் தொடர்பான விவாதங்களை அரசாங்கம் ஆரம்பித்ததும், வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு புலிகள் கோரிக்கை விடுத்ததும், இந்த பதட்டங்களை மேலும், அதிகரித்தன.

விடுதலைப் புலிகளால் தூண்டிவிடப்பட்ட பல்வேறு கடற்படை மோதல்களாலும் நட்புறவு சீர்குலைந்து, ஆயுதப் படைகளின் தலைவர் என்ற முறையில் உத்தரவுகளை வழங்குவதற்கு அரசியலமைப்புப் பொறுப்பான நிறைவேற்று ஜனாதிபதி குமாரதுங்கவின் கட்டளையின் கீழ், இலங்கை கடற்படையை எதிர்வினையாற்றத் தூண்டியது.

இறுதியில்,மார்ச் 2003இல், சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக அமெரிக்கத் தலைநகர் ‘வொஷிங்டன் டிசி’யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டிற்கு அழைப்பு வராததால் ஏமாற்றம் அடைந்ததாகக் கூறி புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகினர். பின்னர், அவர்கள் டோக்கியோவில் ஏற்பாடு செய்யப்பட்ட நன்கொடையாளர் மாநாட்டைப் புறக்கணித்தனர். இதன்போது, வடக்கு மற்றும் கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சி நிரல்கள் விவாதிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் ஈடுபாடு பிரதமர் விக்ரமசிங்கவிற்கு மிக முக்கியமானதாக இருந்தது, அவரது அரசியல் எதிரிகளை எதிர்கொள்ள மட்டுமன்றி, டோக்கியோ மாநாட்டின் போது, உறுதியளிக்கப்பட்ட 40 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெறுவதற்கும், அது பேச்சுவார்த்தை செயல்முறையின் முன்னேற்றத்துடன் கண்டிப்பாகப் பிணைந்திருந்தது.

முக்கிய பேச்சுவார்த்தை மேசையைச் சுற்றியுள்ள இந்த எதிர்மறையான அரசியல் முன்னேற்றங்கள், இலங்கையில் உள்ள சர்வதேச கண்காணிப்புப் பணி (போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு) மூலம் உயர்த்திக்காட்டிய போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் புலிகளின் எண்ணற்ற மீறல்களால் மேலும் மோசமாக்கியது.

இக்கண்காணிப்புக் குழுவின் கூற்றுப்படி, இந்த காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் 119 படுகொலைகளை மேற்கொண்டனர், 253 குழந்தைகளையும் 579 பெரியவர்களையும் கடத்திச் சென்றனர், மேலும் 1,743 சிறுவர்களைப் படையினராகப் பணியில் சேர்த்துள்ளனர். அவர்களின் அறிக்கைகள் குறிப்பிட்ட போர்நிறுத்த மீறல்களின் குறிப்பிட்ட முக்கிய நிகழ்வுகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. விடுதலைப் புலிகளின் நடத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மற்றும் விக்ரமசிங்க மீது பாரிய அழுத்தத்தைக் கொண்டு வந்தது.

## கடிதங்கள்

### பஸ் இன்மையால் அவதி



நாவலப்பிட்டி, கடியன்லேன, தலவாக்கலை வீதியில் சேவையில் ஈடுபட்டுவந்த நாவலப்பிட்டி நகரில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் கடந்த வாரங்களில் இருந்து சேவையில் இல்லாமையால் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த பஸ் சேவையை நம்பியே நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் இவ் வழியே பயணத்தை மேற்கொள்கிறார்கள். பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நாவலப்பிட்டி பஸ் டிப்போவினால் நிர்வகிக்கப்படும் இப் பஸ் சேவை குறித்து டிப்போ தரப்பினருக்கு எடுத்துரைத்த போதிலும், பொருத்தமான நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பயணிகள் கடும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த சாரதி, சேவையில் இருந்த போதே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னரே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பயணிகள், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.

# நியு அந்தனீஸ் குரூப் கைச்சாத்து

ஆரோக்கியமான தேசத்துக்கான தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்து மற்றும் இலங்கையில் நுண்ணுயிர் எதிர்ப்பு இல்லாத கோழி இறைச்சி துறையை உருவாக்கும் வகையில், நியு அந்தனீஸ் குரூப், நவம்பர் 18 முதல் 24ஆம் திகதி வரை நடைபெற்ற உலக AMR விழிப்புணர்வு வார (WAAW) நிகழ்வில் உறுதிமொழியில் கைச்சாத்திட்டது.




அண்மையில் குழுமத்தின் ஹங்வெல்ல பகுதியில் அமைந்துள்ள தலைமையகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் பிரதான வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், சுகாதாரத் துறை நிபுணர்கள், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எமில் ஸ்டான்லி வரவேற்று உரையை ஆற்றியிருந்ததுடன், உலக சுகாதார ஸ்தாபனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிகழ்வில் பிரதான வளவாளராக பங்கேற்ற கலாநிதி கிஷானி தினபால அவர்களின் விளக்கங்களும் முன்னெடுக்கப்பட்டன.

நியு அந்தனீஸ் குரூப் முன்னெடுக்கும் WAAWஇல் கவனம் செலுத்தும் செயற்பாடுகளின் ஒரு அங்கமாக இது அமைந்திருந்ததுடன், AMRக்கு எதிராக திரண்ட நடவடிக்கையையும், 'ஒரு சுகாதாரம்' வழிமுறையை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருந்ததுடன், இது மனிதன், விலங்கு மற்றும் சூழல் சுகாதார செயற்பாடுகளை ஒன்றிணைப்பதாகவும் அமைந்திருந்தது.

தமது ஒழுக்கமான மற்றும் நிலைபேறான செயற்பாடுகளுக்காக நன்கறியப்பட்ட துறைசார் முன்னோடிகளாக நியு அந்தனஸ் திகழ்வதுடன், ஐந்து வருடங்களுக்கு மேலாக நுண்ணுயிர்தவிர்ப்பு அற்ற கொள்கையை பின்பற்றிய வண்ணமுள்ளது. நாட்டில் இவ்வாறான கொள்கையை பின்பற்றும் ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராக திகழ்கின்றமையையிட்டு பெருமை கொள்கின்றது. இந்த விடயத்துக்கான நியு அந்தனீஸ் நிறுவனத்தின் உறுதி மொழி என்பது எப்போதும் தொடர்ச்சித் தன்மை வாய்ந்ததாகவும், தனது இதர பல முயற்சிகளிலும் நுண்ணுயிர் தவிர்ப்பு அல்லாத உற்பத்தி முறைமையை பேணுவதாகவும் அமைந்திருந்தது. இதனால் இலங்கையில் மிகவும் பாதுகாப்பான கோழி இறைச்சி உற்பத்தியாளர் எனும் கீர்த்தி நாமத்தையும் பெற்றுள்ளது.

நிறுவனம் தனது செயற்பாடுகளின் போது நுண்ணுயிர் தவிர்ப்பு தடைக்கு (AMR) எதிராக போராடுவதில் உறுதியாக இருந்துள்ளது. முற்றிலும் இயற்கை கோழி இறைச்சி உற்பத்திக்கு முன்னுரிமை வழங்குவதுடன், அமெரிக்காவின், தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தின் நியமங்களை பூர்த்தி செய்யும் கடுமையான உயிரியல் பாதுகாப்பு மற்றும் விலங்கு நலன்புரி செயற்பாடுகளை பின்பற்றுகின்றது.

நியு அந்தனீஸ் "கிறீன் கட்டளைகள்" என்பது தனது உற்பத்திச் செயன்முறையில் சகல கட்டங்களிலும் நிலைபேறாண்மையை உறுதி செய்வதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. குறிப்பாக பண்ணையிலிருந்து முள்ளுக்கரண்டி வரையான சகல செயற்பாடுகளிலும், நுண்ணுயிர் தவிர்ப்பு இன்மை செயற்பாடுகளை கடுமையாக பின்பற்றல், நுகர்வோர் உயர் தரம் வாய்ந்த, பாதுகாப்பான கோழி இறைச்சி தயாரிப்புகளை பெறுவதை உறுதி செய்தல் போன்றன இதில் அடங்கும். இயற்கையாகவே உக்கும் பொதியிடல் தீர்வுகளை பயன்படுத்தி, கழிவை குறைத்தல் மற்றும் சூழல்கட்டமைப்புகளில் ஏற்படும் தாக்கத்தை தணித்தல், ISO நியமங்களின் பிரகாரம் பச்சை இல்ல வாயு வெளியேற்றங்களை கண்காணித்து நிர்வகித்தல் மூலம் காபன் வெளியீட்டை குறைத்தல், நிலைபேறான வகையில் பெறப்பட்ட U.S. சோயா போன்றன நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் பல செயற்பாடுகளில் சிலவாகும்.

உறுதியளிக்கப்பட்ட நுண்ணுயிர் தவிர்ப்பு அற்ற பரந்தளவு தயாரிப்புகளினூடாக, இலங்கையில் புரத பற்றாக்குறையை தீர்ப்பதில் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. நாடு முழுவதையும் சேர்ந்த சமூகங்களுக்கு உயர்-போஷாக்கான உணவு மூலம் வழங்கப்படுகின்றது. WAAW இன் உறுதி மொழியான 'அறிவூட்டல், செல்வாக்கு செலுத்தல், உடன் செயலாற்றல்' என்பதற்கமைய, ஊழியர் ஈடுபாடு, பேராதனை பல்கலைக்கழகத்தில் பயிற்சிப்பட்டறை மற்றும் உள்ளூர் பாடசாலையில் விழிப்புணர்வு அமர்வுடன், நீர் சுத்திகரிப்பு கட்டமைப்பை நன்கொடையாக வழங்கியமை போன்ற பல இதர செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளது.

நிலைபேறான கோழி இறைச்சி உற்பத்தியில் முன்னோடியாக திகழும் நியு அந்தனீஸ் குரூப், தனது முன்னோடியான சாதனைகளுக்காக பெரிதும் அறியப்படுகின்றது. இதில் FSSC 22000 சான்றிதழ், கட்டுப்பாட்டு ஒன்றியத்தின் பச்சை இல்ல வாயு (GHG) உறுதிப்படுத்தல் அறிக்கை மற்றும் பல்வேறு இதர சான்றிதழ்களான GMP, HACCP, ISO 22000மற்றும் ஹலால் சான்றிதழையும் பெற்றுள்ளது. தனது தயாரிப்பு வழங்கல்களில் மற்றும் கிடையான ஒன்றிணைப்பு போன்றவற்றில் துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கான திட்டங்களினூடாக ஏற்கனவே பயன்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளதுடன், இலங்கையில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நேர்த்தியான மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுவனம் முன்னெடுத்த வண்ணமுள்ளது.

### சிறந்த கூட்டாண்மை நிறுவனமாக

# SLT–MOBITEL கௌரவிப்பு

இலங்கையின் முன்னணி வியாபார சஞ்சிகையாக மூன்று தசாப்த காலத்தை பூர்த்தி செய்திருந்தமையை குறிக்கும் வகையில், 25 சிறந்த கூட்டாண்மை நிறுவனங்களை கௌரவிக்கும் 'LMDவிருதுகள் இரவு' எனும் பெருமைக்குரிய நிகழ்வை Lanka Monthly Digest (LMD) அண்மையில் முன்னெடுத்திருந்தது. இந்த வர்ணமயமான நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்ற நிறுவனங்களில் SLT-MOBITEL அடங்கியிருந்தது. இந்நிகழ்வு, சினமன் லைஃப் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




கடந்த 30 வருட காலப்பகுதியில் சஞ்சிகையின் Brands Annual, LMD 100, நன்மதிப்பை வென்ற மற்றும் அதிக விருதுகளுடனான தரப்படுத்தல் போன்றன அடங்கலாக விசேட வெளியீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த முன்னணி கூட்டாண்மை நிறுவனங்களை கௌரவிப்பதாக LMD விருதுகள் இரவு அமைந்திருந்தது. தமது தொழிற்துறைகளில் தொடர்ச்சியாக சிறப்பு மற்றும் புத்தாக்கத்தை வெளிப்படுத்தியிருந்த நிறுவனங்களை வெளிக் கொண்டுவரும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இலங்கையின் முன்னணி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தேசத்தின் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் சிறந்த நிலையில் காணப்படும் நிறுவனமாகும். பரந்த வலையமைப்பு மற்றும் நிலையான, மொபைல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை நாடு முழுவதிலும் வழங்குவதனூடாக, இலங்கையின் டிஜிட்டல் நிலைமாற்றத்தை முன்னேற்றுவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

புத்தாக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பை SLT-MOBITEL மீள உறுதி செய்து, நிலையான மற்றும் மொபைல் தொலைபேசி, புரோட்பான்ட், டேட்டா சேவைகள், இணைய இணைப்பு தொலைக்காட்சி (IPTV), cloud computing, hosting services மற்றும் மேம்படுத்தப்பட்ட வலைப்பின்னல் தீர்வுகள் போன்றன அடங்கலாக பல்வேறு சேவைகளை வழங்குகின்றது.



# ஊடகம் என்றொரு ஊடுறும் ஆயுதம்

ஊடகம் என்றதோர் ஊடுறு ஆயுதம்
ஊடறுத்துலவிடும் ஊர்கள்
உலகெலாம் உடனுடன் செய்திகள் தேடித்
தம்முயிர் ஊசலாடினும் உலகம்
முன் நிறுத்துவர்

உண்மையைத் தேடியே உயர்பணிசெய்திடும்
உத்தமர் பலருளர் உதாரணபுருஷராய்
உடன்வழித் தொடர்புகள் ஒலி ஒளி வர்ணனை
உலகெலாம் அறிந்திட ஒருநொடிப் பொழுதினில்

கொடுங்கோல் ஆட்சியர் கொலை கொள்ளை புரிபவர்
கொன்றே இனங்களை ஒழித்திடும்
கொடியர்கள் பாவிகள் யாரையும்
பின்தொடர்ந்தவர் தமை பதில்சொல
நீதிமுன் நிறுத்திடும் தகைமையோர்


ஊடகப் பணியினில் உண்மையைக் கூறுவோர்
அடுத்த கணத்தினில் உயிரினைக்
கறந்திடும் கொடுமை தொடர்ந்திடும்
காலம் காலமாய் கற்றும் தியாகிகள்
தர்மமாய்க் காண்கிறார்

கோடரிக்காம்புகள் நல்ல குடியினில்
கறுத்த வெள்ளாடுகள் குழிதோண்டும்
கூட்டமும் குவிந்தவர் கெடுப்பதோ
எத்தனை குடிகளை கெடுவதோ ஊடகப்பெயர்
அவர் குறைகளால்

பணத்துடன் பரவலாய்
பலர்காண்பார்வையில்
பட்டிடச் செய்திகள் புனைவது
அவர்திறன் தேடி அலைபவர் தவறுகள்
துரோகங்கள் மாட்டிடும் குடும்பமோ
மானமிழந்திடும்
ஊடக தர்மத்தின் உகந்தவை
உயர்த்தியே ஈனத் தனங்களை
உதிர்த்திட வேண்டினேன் நேர்மை
நெறிமுறை போற்றிடும்
உத்தமர் நாடே மதித்திடும்
நற்பெயர் நாட்டுவீர்!



கலாநிதி மு.ந.சிவச்செல்வன்
ஆக்லாந்து, நியூசிலாந்து



# இன்பம் இதுதான்

மேகம் சூழ்ந்து நின்று
மின்னல் பூத்திருக்கும்
வெண்பஞ்சு திதறிவிழும்
வான்வெளியில் மாக்கோலம்

ஒற்றைக் காலூன்றி மண்ணில்
மரங்கள் குடைவிரிக்கும்
தென்றல் வந்து காதுகளில்
கதைசொல்லிச் செல்லும்

வான்வெளியில் தேனமுதாய்
மழைமொக்குகள் காலூன்றும்
குளிர்ந்த நீரோடைகளிலே
கயல்மீன்கள் துள்ளியெழும்

இயற்கை அழகை இரசித்தபடி
உள்மனம் குதூகலம் கொள்ளும்
இயற்கையழகை உள்வாங்கியபடி
பிரியாதவரம் கேட்டு மறையும்



க.யோகானந்தன்



# வழக்கு

இந்த
காற்றுக்கும்
எனக்கும்
எல்லைச்
சண்டை

எப்போது
பார்த்தாலும்
தீண்டல்
விலகல்
வாசம்
சுவாசம் – என
எல்லை மீறி

அந்த
சுருண்ட
முடிக்காரியை
நினைவூட்டிச்
செல்வதால்...

இனி
வழக்குத்
தொடர்வதை
தவிர
எனக்கு
வேறு
வழியில்லை



சிட்டு




# பாய்ந்தோடி வரும் பாசங்கள்

இதுவரை நான் பலரை கண்டதில்லை
அதேவேளை, சிலர் எனக்கு
நண்பர்களாகவும் இருந்தனர்
இன்னும் சிலரோ
தெரிந்தவர்கள்தான்
வசதியான வாழ்க்கை
காசு பணம் சொகுசான கார்கள்
மாடி வீடுகள் என வாழ்ந்தாலும்
இந்த இவர்களெல்லாம்
என்னை தெரு தின்னைகளில்
கண்டபோதெல்லாம் ஒரு சிரிப்புத்தன்னும்
பார்த்து உதிர்க்காது
முகந்திருப்பிப் போனவர்கள்தான்
இப்போது திடீரென என்னைத்
தெரிகிறது மட்டுமல்ல எனது
குடும்பத்தவரையும் தெரிகிறது
அக்கரையுடன் அருகே ஓடோடிவந்து
விசாரிப்பதில் எவ்வளவு ஆவலாக
என்ன ஓர் ஆச்சரியம். எப்படி வந்தது
இவர்களுக்கு இந்த ஞானம்...?
உண்மை புரிந்து
இவர்களுக்கெல்லாம் எம்மைப்
போன்றவர்களை தெரிந்துகொள்ள
தேர்தலே – நீ
அடிக்கடி வரவேண்டும்
இவர்கள் எம்மை அக்கரையுடன்
அனுகி விசாரித்துச் செல்வதற்காக மட்டுமே...
அதைவிட வேறொன்றும்
இவர்களால் எமக்கு ஆகாது
என்பது எமக்கெல்லாம்
நன்றாகவே தெரியும்
ஏனெனில்,
எத்தனை தேர்தல்கள் வந்தன
இவர்களைப்போல
எத்தனைபேர்களை நாம்
கண்டவர்கள்...மட்டுமல்ல
காணாமலும்போய்
மீண்டும் வந்து முகங்காட்டி சிரிக்க
இவர்களின் திடீர்பாசங்கள்
எப்படியென தெரியாதவர்களா
நாம்...?



ஷெல்லி

# முதியோரை இம்சைப்படுத்தும் சமூகம்



யே.வினிதா,
ஊடகத்துறை துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பெற்ற பிள்ளைகள், உறவினர்களின் தொடர் தாக்குதல்களாலும் அநாகரிகமான வார்த்தை பிரயோகங்களாலும் பாதிக்கப்பட்ட பல முதியோர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி வீதிக்கு வரும் நிலை இன்று உருவாகியுள்ளது. வயது முதிர்ந்தவர்கள் பொதுவாக, தமது பிள்ளைகளாலும் உறவுகளாலும் தொடர்ச்சியாக இம்சை படுத்தப்படுகிறார்கள்.

அனுபவம் மிக்க முதியவர்கள், சிறுவர்கள் இருக்கும் வீடுகளில் தான் சந்தோசமும் நிறைவும் இருக்கும் என குறிப்பிட்டாலும், முதியவர்கள் தமக்கு ஒரு இடைஞ்சல் என்றே பலரும் நினைக்கிறார்கள். அதனால் தான் பெரும் வசதி படைத்த பிள்ளைகள் கூட தமது வயது முதிர்ந்த பெற்றோரை எங்கேயாவது அனாதைகளாக முதியோர் இல்லங்களில் தள்ளி விடுவதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளனர்.

முதியவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

சகல விடயங்களிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கூறப்படுவதுடன் அரசாங்கம் முதியோர்களுக்கான உரிய சலுகைகளைப் பெறக்கூடியதாக விசேட அடையாள அட்டைகளையும் வழங்கி வருகின்றது. எனினும் அரசு செயலகங்களிலும் சரி, வைத்தியசாலைகளிலும் சரி, போக்குவரத்து சேவைகளிலும் சரி அவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியது. அரச அலுவலகங்களில் தமது தேவைக்காகச் செல்லும் முதியவர்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்படுகிறார்கள்.

முதியவர் தான் வந்த விடயத்தைக் கூறி, அதை முடித்துத் தரும்படி கேட்டால், முகாமைத்துவ உத்தியோகத்தர்களான இளைஞர்கள் அதனைக் கவனத்தில் எடுக்காது தங்களுக்குள் சிரித்துக் கதைத்து பொழுதைப் போக்கிக் கொண்டும் தற்செயலாகத் திரும்பிப் பார்த்து முதியவர் இருப்பதைக் கண்டு “ஐயா கொஞ்சம் இருங்கள் ஆள் வரணும்” என்று அவரை சமாளிக்கிறார்கள். வைத்தியசாலைகளில் அவர்கள் படும் பாடு மிகவும் பரிதாபத்திற்குரியது.

அனேகமாகத் தினமும் பெருந்தொகையான முதியவர்கள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்வதுண்டு. ஒருவர் தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்றால், மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அதிகாலையிலேயே முதியவர்கள் வந்த போதும், தனக்குரிய மருந்துகளை வாங்கிச் செல்வதற்காக ஒரு நாள் பொழுதை செலவிட வேண்டியவராக இருக்கிறார்கள்.

அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தாங்கள் விரும்பியபடி எல்லாம் அந்த மூத்த மனிதர்களை ஆட்டிப் படைக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நடைமுறைகளை ஏற்படுத்தி அவர்களைப் படாத பாடு படுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு கிளினிக் கொப்பிகளை மேசையில் அடுக்குங்கள் என்கின்றார்கள். மறுநாள் “போய் கதிரையில் இருங்கள் வந்து வாங்குவோம்” என்பார்கள்.



இன்னொரு நாளைக்கு அடுத்த கதிரையில் இருங்கள் என எழுப்பி விடுவார்கள். தமக்கு வேண்டப்பட்ட இளசுகள் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்த பின்னரே முதியவர்களை நோக்குகிறார்கள்.

நாள் முழுவதும் வைத்தியசாலை வாங்கிலே தவம் கிடந்து, ஒரு படியாக மருத்துவ பரிசோதனையை முடித்துக் கொண்டு மருந்து வாங்கச் சென்றால் பசி தாகத்துடன் நீண்ட நேரம் கால் கடுக்க வரிசையில் நின்றாலும், அங்கும் ஊழியர்கள், இடையில் புகுந்து தமக்குத் தேவையானவர்களிடமிருந்து மருந்து கொப்பியை மருந்தாளரிடம் கொடுத்து வாங்கி கொடுக்கிறார்கள்.

நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருக்கும் இந்த முதியவர்களைத் தாமதம் இன்றி அனுப்பி வைக்க வேண்டும் என்ற சிந்தனை எள்ளவும் இல்லாதவர்களாக மருந்தாளர்கள் நடந்து கொள்வது குறித்து அவர்கள் மனம் வெறுத்துப் போவதைக் கவனிப்பார் யாருமே இல்லை. வரிசையில் நிற்கும் முதியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துகள் கூட முழுமையாகக் கிடைப்பதில்லை. கால்கடுக்க நீண்ட நேரம் நின்றும், ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்.

பஸ் பயணங்களிலும் அவர்கள் துன்பப்படுகின்றனர். நீண்ட தூரப் பயணங்களிலும் கூட அவர்கள் நிற்க வேண்டியுள்ளது.

இருக்கைகளில் இருக்கும் இளசுகள் கண்டும் காணாதவர்களாக எங்கேயோ பார்க்கிறார்கள் அல்லது தொலைப்பேசியைப் பார்க்கின்றனர். மோட்டார் சைக்கிளில் வரும் இளைஞர்கள் வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்பதில்லை. துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் முதியவர்களைப் பார்த்து “சொல்லிட்டா வந்தீர்கள்” என்கிறார்கள்.

தனியார் பஸ்களில் நடத்துநர்களாக உள்ள இளைஞர்கள் பஸ் தரிப்பிடங்களில் இளம் பெண்களின் முதுகில் கையை வைத்து உள்ளே ஏற்றி விடும் அதே சமயம், முதியவர்கள் எனின் “அப்பு அல்லது ஆச்சி கெதியா ஏறுங்க” என்கிறார்கள். இளைஞர்கள் முந்திக்கொண்டு ஓடி இருக்கைகளைப் பிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். இளைஞர்களின் உலகம் இப்படிப் போய்க் கொண்டிருப்பதில் முதியவர்கள் விரக்தி அடைகிறார்கள். இளம் சமூகம் எல்லாமுமே இப்படி என்றல்ல. தமது பெற்றோர்களை மட்டுமின்றி ஏனைய முதியவர்களை மதித்து உதவுபவர்களும் உள்ளார்கள்.

இத்தகையவர்கள் மிகவும் குறைந்த அளவினரே பெரும்பான்மையான இளைஞர்களிடம் இந்த நல்ல அம்சத்தைக் காண முடியாது.

முதியவர்களைக் கிண்டல் அடிப்பதிலும் உரிய மரியாதை வழங்காது சில்லறை கிண்டல்களை கையாள்வதும் ஏதோ தாங்கள் பெரிய சாதனையை நிகழ்த்தி விட்டதாக எண்ணி பெருமிதமாக நடந்து கொள்கின்றனர்.

இவர்கள் சமூகம் தம்மை எந்த அளவில் எடுத்துக் கொள்கின்றது. என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும் நாளை நாங்களும் முதியவராகலாம் என்ற வாழ்வு நிலை தத்துவங்களைப் புரிந்து கொண்டால் தமது செய்கைக்காக நிச்சயம் வருத்தம் அடைவார்கள். அரசு விசேட அடையாள அட்டை வழங்கி விட்டால் முதியவர்களுக்கான கௌரவத்தை வழங்கியதாகவோ சிறுவர் முதியோர் தினம் என கொண்டாடிவிட்டால், முதியோர் எல்லோரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் வாழுகிறார்கள் அர்த்தமில்லை.

வாழ்வு குறித்த அனுமானங்களைச் சட்ட ரீதியாகவும் மனிதாபிமான முறையிலும் அணுகக்கூடிய வழிமுறைகளை இளைஞர்களை இணைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.




# Extra sensory perception (புலன் கடந்த புலக்காட்சி)



பா.ரோஜனகுமார்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

*Extra sensory perception* ஆறாவது அறிவு அல்லது *Cryptaesthesia* என்று அழைக்கப்படுகின்றது. புலன் கடந்து புலக்காட்சி என்பது ஒரு உயிரினம் அல்லது மனிதன் தனது பார்வை, கேட்டல், தொடுதல், நுகர்தல் மற்றும் ஏனைய உள்ளுணர்வுகளைக் கடந்த ஒரு அனுபவத்தைப் பெற்றிருப்பதைக் குறிக்கிறது.

பெரும்பாலானவர்கள் இதனை அதீத உளவியல் என்று கூறுவார்கள். உலக மக்கள் தொகையில் கணிசமானவர்களுக்கு இது ஒரு விசித்திரமான நிகழ்வாகக் காணப்படும்.

நம்மில் பலர் எதையாவது கனவு கண்டோம், அது இறுதியில் நனவாகிவிட்டது என்பார்கள். தூரத்தில் இருக்கும் ஒருவருக்கு ஏதோ ஒரு விடயம் நடக்கப்போவதாகத் தோன்றுகின்றது என்பார்கள். அது சில நாட்களின் பின் நடந்திருக்கும். யாரையாவது யோசித்துக் கொண்டிருப்போம்.

அந்தநேரத்தில் அவர்கள் தொலைபேசியில் அழைப்பார்கள். இவையெல்லாம் புலன் கடந்த புலக்காட்சியின் செயல்பாடுகளே. ஆனால், இது எல்லா மனிதர்களுக்கும் நிகழுமா என்பது கேள்விக்குறியான விடயமாகும். மனித மூளையின் வலது அரைக் கோளம் சிறப்பாக செயல்படும் நபர்களுக்கு *ESP Power* அதிகளவில் காணப்படுகின்றது என பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இது பிரதானமாக ஐந்து வகையாகக் காணப்படுகின்றது. *Telepathy, Precognition, Retro cognition, Psychokinesis, Clalruoance, Medium ship* என்பனவாகும். ஒரு மனிதனின் மனதில் உள்ள சிந்தனைகள், உணர்வுகள் அல்லது அறிவை கடந்து அதே நேரத்தில் மற்றொரு நபருக்கு நேரடியாகத் தெரிவிக்கும் திறன் டெலிபதி ஆகும். *Precognition* என்பது எதிர்காலத்தில் நிகழ இருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்வதாகும். *Retro cognition* என்பது முன்பு இடம்பெற்ற கடந்தகால நிகழ்வுகளைப் பற்றி கனவுகளின் வாயிலாக உணர்வுப்பூர்வமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய செயல்முறை ஆகும். *Psychokinesis* எனும்போது இது மனதின் சக்தியால் பொருட்களை இயக்கும் செயல் முறையாகும்.

ஆனால் இதற்கு அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் கிடையாது. அது ஒரு கற்பனை அல்லது மனித மனத்தின் அசாதாரண நிலை என்றும் கொள்ளலாம். *Clairvoyance* என்பது ஒரு புறநிலை உணர்வாகக் கொள்ளப்படுகின்றது.

கண்ணுக்குத் தெரியாத வண்ணம் ஒரு விடயத்தை அனுபவிக்கும் திறனாகும். *Medium ship* என்பது உயிரிழந்தவர்களுடனான ஒரு தொடர்பை ஏற்படுத்தும் செயன் முறையாகும். இதனை பொதுவாக உணர்வு மற்றும் கற்பனையின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியும்.

புலன் கடந்த புலகாட்சி என்ற சக்தி உண்மையில் இருக்கின்றது என்பதைப் பலர் நம்பவில்லை. ஆனால், இதனை அனுபவிக்கும் மனிதர்கள் மற்றவர்களை விட தன்னில் ஒரு அமானுஷ்ய சக்தி இருப்பதாக எண்ணுகின்றார்கள். தன்னை ஒரு சிறப்பு மனநிலையில் வைக்கும் போது மட்டுமே இவ்வாறான ஒரு சக்தியை உணர முடியும். புலன் கடந்த புலக் காட்சியைவளர்க்க என்ன செய்ய வேண்டும்.

## திறமைகளை அங்கீகரித்தல்:

தன்னிடம் உள்ள திறமைகளை இனங்கண்டு அதில் அதிக கவனத்தைச் செலுத்தவேண்டும். கலைப் படைப்புகளான கவிதை, சிறுகதை எழுதுவதில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். சில விடயங்களை மனப்பாடம் செய்யும் போது குறித்த நபரின் மூளை உடல் ரீதியாக மாற்றமடையும். இதன் ஊடாக புலன் கடந்த புலக்காட்சியை வளர்த்தெடுக்க முடியும். ஒரு விடயத்தை மனம் விளங்கிக் கொள்வதற்கு அதிகநேரம் எடுக்கும் என்பதால் ஒரே விடயத்தை அடிக்கடி செய்ய வேண்டும் இதனூடாக திறமை வளர்ச்சி அடையும்.




## அதிக பயிற்சிகளில் ஈடுபடுதல்:

பயிற்சிகள் குறித்து திறனை அடைவதற்கு பல வழிகளில் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் வெளிவரக்கூடிய பத்திரிகை, சஞ்சிகைகளை வாசிக்க வேண்டும். இணையத் தளங்களில் தேடல்களை மேற்கொள்ள வேண்டும்.

## கணிப்பிடுதல்:

நாளைய தினம் நாம் என்ன செயற்பாடுகளை செய்யப் போகின்றோம் என்பது தொடர்பில் கணிப்பிடுதல், அமைதியான சூழலில் அமர்ந்து மனதை ஒரு நிலைப்படுத்தி நாம் எதை செய்யப் போகிறோம்? எப்படி செய்யப் போகிறோம் என்ற திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

## Online சோதனைகள்:

*Online* இல் காணப்படக் கூடிய புலன் கடந்த புலக் காட்சி சோதனைகளுடன் வேலைசெய்தல் வேண்டும் . கவனம் சிதறாமல் அமைதியாக இருந்து சோதனையில் ஈடுபடவேண்டும். ஒரே நாளில் பல தடவைகள் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக புலன் கடந்த புலக் காட்சித் திறனைக் கட்டி எழுப்ப முடியும்.

இன்றைய சமுதாயத்தில் புலன் கடந்த தொலைக்காட்சியின் செல்வாக்கு மிகவும் குறைந்த அளவில் தான் காணப்படுகின்றது. இருந்த போதிலும் சில ஆர்வமுள்ள ஆய்வாளர்களால் பேசப்படுகின்றது.

கோட்பாட்டின் அடிப்படையில், மூலக் கனவுகளுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளை அல்லது அறிவை அனுபவிக்கும் திறனாகக் கருதப்படுகின்றது. முறைப்படி அறிவியல் ஆய்வுகளில் நிரூபிக்க முடியாததால் இது பெரும்பாலும் புனை கதைகள், மனோதத்துவம் மற்றும் இரகசிய துறைகளில் உள்ள ஒரு கருத்தாக உள்ளது.

பெரும்பாலும், இக்கருத்துக்கள் பரபரப்பாக இருந்தாலும், இதனை ஆதரிக்கும் தரவுகள் மிகவும் குறைவு. தொலைநோக்குப் பார்வை, நேர்மறை சூழல் மற்றும் அனுபவம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் போது, இவை மனவியல் ஆராய்ச்சியில் ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடும். பொதுவாக இது இன்றைய சூழலில் மெய்மையான அறிவியல் அல்லது அதி மனித சக்தி என்று பார்க்கப்படவில்லை. இருப்பினும், பல இடங்களில் ஆராய்வு மற்றும் ஆர்வம் இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சமுதாய அபிவிருத்தியில் கல்வியின் முக்கியத்துவம்

டாக்டர் ஆர்.சிறிகிருஷ்ணன்,
அதிபர் காலி/துந்துவை,
முஸ்லிம் மகா வித்தியாலயம்,
பெந்தோட்டை.

தமது பிள்ளைகளுக்கு ஏன் கல்வி அவசியமாகின்றது? கல்வியின் சிறப்பு என்ன? என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பொதுவாகக் கல்வி என்பது படித்தவர்கள், படிக்காதவர்கள், ஏழைகள் பணக்காரர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என யாராக இருந்தாலும் நாம் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற போது கேட்கின்ற முதற்கேள்வி உங்கள் மகள் அல்லது மகன் என்ன படிக்கின்றார்? எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றார்? என்பதே தவிர, எவ்வளவு பணம் வைத்திருக்கின்றார்? என்பது அல்ல. இவ்வாறான இந்தப் பள்ளிக்கூடங்களின் சிறப்பு என்ன? கல்வி பணத்தையும் விடப்பெரியதா? அல்லது வணக்கஸ்தலங்களை விடப் பெரியதா? அவற்றில் எது பெரியது என சிந்திப்போமேயானால், பள்ளிக்கூடங்கள் பணத்தை விட பெரியதுதான். இந்த பள்ளிக்கூடங்கள் கோயில்களுக்கு இணையானவை மட்டுமல்ல கோயில்களை விட உயர்ந்ததும்கூட காரணம் என்னவென்றால், நீ கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்றால், இந்துவாக இருக்க வேண்டும். மசூதிக்குச் செல்ல வேண்டுமென்றால் நீ ஒரு இஸ்லாமியனாக இருக்க வேண்டும். தேவாலயத்துக்குச் செல்ல வேண்டுமென்றால் நீ ஒரு கிறிஸ்தவனாக இருக்க வேண்டும்"

ஆனால், இது போன்ற பள்ளிக் கூடங்களுக்குச் செல்ல வேண்டுமாக இருந்தால், நீ ஒரு மனிதனாக இருந்தாலே போதும். அதுதான் இந்தப் பள்ளிக் கூடங்களிலுடைய சிறப்பு, கல்வியினுடைய சிறப்பு. என்னவென்றால், நல்ல மதிப்பெண்களைக் பெற வேண்டும். மிகப் பெரிய பரிசில்கள் வாங்க வேண்டும், கௌரவமான தொழில் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனைகளுடனேயே பெற்றோர்களும், பெரியோர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதுவல்ல, கல்வியினுடைய சிறப்பை நாம் முழுமையாக அறிந்து கொண்டால் மட்டுமே பிள்ளைகள் எதற்காகப் படிக்க வேண்டுமென்று அறிய முடியும். "மாணவனையும் அவனது வீட்டையும் ஏன் நாட்டையும் உயரத்தைக் கூடியது கல்வி ஒன்று தான்" எவ்வளவு பெரிய கோடிஸ்வரர்களாக இருந்தாலும், "கல்வியைச் சொத்தாகப் பெறமுடியாது. அவனவன் படித்துத்தான் பெறமுடியும்." கல்வி என்ற ஒன்றை வைத்துக் கொண்டால், நம்பிக்கை நிறைந்த பயணத்தை, உங்களுடைய பிள்ளைகள் இந்த உலகிலே முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இந்த உண்மைகளை உணர்ந்த காரணத்தினால்தான் "படிக்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே மேல்" என்றார் பேரறிஞன் பிளேட்டோ. மேலும் "அறியாமை என்பது வெட்கப்படக் கூடியதொன்று. ஆனால், அதை அறிந்து கொள்ள விரும்பாமை என்பது அதனைவிட வெட்கக்கேடு" என்றார் மன்றான் வென்சயின் பிறங்கிளின். "இந்த உலகையே மாற்றக் கூடிய ஆயுதம் ஒன்று உண்டு. அந்த ஆயுதத்தினுடைய பெயர்தான் கல்வி" என்றார் நெல்சன் மண்டேலா. "படிக்கத் தெரியாத மந்திரியாய் இருப்பதைவிட படிக்கத்தெரிந்த ஏழையாக இருப்பதுவே மேல்" என்று பதிவு செய்தவர் மெக்காளே. ஆகையினால், நாம் படிக்கின்ற போது, பொருளுணர்ந்து படிக்க வேண்டும். அவ்வாறு படிக்கின்ற போது, நாம் பெறுகின்ற பதக்கங்கள், விருதுகள், சான்றிதழ்கள் நமது மார்புகளை அலங்கரிக்கப் போவதில்லை. சிந்தித்துப் பார்ப்போமேயானால், நாம் படித்த கல்வி மட்டுமே நம்மிடத்தில் இருக்கும். "பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது" என்றும் "முதுமையை முன்னிட்டு முன்னதாகவே செய்து வைத்துக் கொள்கின்ற பாதுகாப்புப் பணிகளிலேயே மிகவும் உயர்ந்தது கல்வி" எனவும் நாம் படித்திருக்கின்றோம்.

பணக்கார வீட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்களோ இல்லையோ ஏழைப் பிள்ளைகள் கட்டாயம் படித்தேயாகவேண்டும். ஏன் தெரியுமா? பணக்காரர்களுடைய மாளிகையிலே பிறக்கின்ற பிள்ளைகளினுடைய கால்களைக் கூட தாங்குவதற்குப் பல தோள்கள் காத்திருக்கின்றன. ஏழைக் குடும்பத்தில் பிறக்கின்ற பிள்ளைகளின் தோள்களுக்குச் சுமைகள் காத்திருக்கின்றன. அவர்கள் பல பொறுப்புகளுடன் பிறக்கின்றார்கள். இதிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். பணக்காரருடைய பிள்ளைகள் பிறக்கும் போது, சுகமாக வாழ்வதற்கான பயணச்சீட்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஏழைகளின் பிள்ளைகளுக்குப் பணமே இருப்பதில்லை. பணக்காரருடைய மாளிகையிலேயே பிள்ளைகள் வளர்ந்தே பிறக்கிறார்கள். ஏழைக் குடும்பத்தில் பிறக்கின்ற பிள்ளைகள் பிறந்துதான் வளர்கிறார்கள் என்பதை நாம் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். "வளர்ந்து பிறப்பது வாரிசுரிமை பிறந்து வளர்வது பிறப்பின் பெருமை" என்பதைப் பிள்ளைகளுக்கு அழுத்திச் சொல்லிக் கொடுங்கள். பணக்காரப் பிள்ளைகள் மகா இலக்குமியால் பிறரை ஆளும்போது, ஏழைப் பிள்ளைகள் சரஸ்வதியின் கல்வியால் மட்டுமே பிறரை ஆள முடியும். எனவே, "ஏழைப் பிள்ளைகள் இந்த உலகை ஆளவேண்டுமானால் கல்வியால் மட்டுமே முடியும்" என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், கல்வியின் சிறப்புக்களை நோக்கும் போது "வெள்ளத்தால் போகாது வெந்தழலால் வேகாது, வேந்தரால் கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது கள்ளர்க்கோ மிகவரிது, காவலோ மிகவெளிது, கல்வியெனும் உள்ளத்தே பொருளிருக்க, உலகெல்லாம் பொருள் தேடி உழல்வதேனோ" எனக் கூறுகிறது விவேகசிந்தாமணி. ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி, நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை, நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு, ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்" என்கின்றது கொன்றை வேந்தன். "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்கின்றது உலகநீதி. "இளமையில் கல் என்கிறது" ஆத்திசூடி. அதுபோல "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற ஒரு பழமொழியும் உண்டு. "கல்வி கரையில் கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின் ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப் பாலுண் குருவின் தெரிந்து" எனக் கூறுகிறது நாலடியார் (135). "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்று ஔவையாரும், "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என நறுந்தொகையில் அதிவீர இராமபாண்டிய மன்னனும் கூறுகின்றார். "ஏராள செல்வத்தை ஈதலினும் பிள்ளைக்கு சீராய் தரும் கல்வி சீர்" என்றே நினைத்து பெற்றோர்கள் செயற்படுவார்களேயானால் தமது பிரதேசமும் இந்த நாடும் மிக உயர்ந்த நிலைக்குச் செல்லவும். வறுமையைப் போக்கவும் உதவும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. கல்வியானது மனிதனை சிறந்த ஒழுக்கமுள்ளவனாக மாற்றுகின்றது. டாக்டர் அப்துல் கலாம்.

> **“ நாம் படிக்கவில்லை என்றால், உடல் உழைப்பினை மட்டும் நம்பி மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து போகின்ற உழைப்பாளிகளிலே ஒருவராகச் சேர்ந்து விடுவார்கள். அறிவைப் பயன்படுத்தி பிள்ளைகள் படிக்க வேண்டுமென்றால், இந்த சமுதாயத்தை வெற்றி கொள்ள வேண்டுமென்றால், உலகத்தை வெல்ல வேண்டுமென்றால், பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமென்றால் பிள்ளைகள் படித்தேயாகவேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை**

அண்ணல் அம்பேத்கர், கல்பனா சாவ்லா, அரிஸ்டோட்டில் போன்ற பலர் கல்வியால் உயர்வு அடைந்தவர்களாவார்.

மேலும், கல்வியின் சிறப்பை நோக்கும் போது, மனித வாழ்க்கையில் உயர்வான எண்ணங்களும் உன்னதமான குணங்களும் தோன்ற வேண்டுமாயின் கல்வி என்பது அவசியம். "அரும் பரிசு பிள்ளைக்கு ஆயிரம் ஈதலினும் பெரும் பரிசு கல்வி" என்றும் "கல்லாதும் கேளாதும் கற்றார் அவை நடுவண் சொல்லாடு வாரையும் அஞ்சற்பாற்று - எல் அருவி பாய் வரை நாட! பரிசு அழித்தாரோடு தேவரும் ஆற்றல் இலர்" என்கிறது பழமொழி நானூறு அதாவது கற்றார் அவைநடுவிலுருக்கும் கற்றவர்கள், கல்லாத புல்லறிவாற் பேசும் கயவரிடத்தே எதுவும் எதிர் மாற்றம் பேச மாட்டார்கள், அவர்கள் நல்லறிவும் நற்பண்பும் அற்றவர்கள் என்பதால் அவர்களை அமைதியாகக் கடந்து செல்வார்கள் இதனை "பரிசழிந்தாரோடு தேவரும் மாற்றல் இலர்" எனும் பழமொழியில் கூறப்பட்டுள்ளது, அதாவது, தேவர்கள் கூட பழிகொண்ட புல்லறிவுகளோடு தொடர்பு வைத்துக் கொள்ளமாட்டார்கள் எனக் கூறப்படுவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் எத்துணை அவசியமாகின்றது என்பது புலப்படுகிறது.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் மதுவாகப் பாவித்து - தானுந்தன் பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே கல்லாதான் கற்ற கவி! என்கின்றது முதுரை, அதாவது கானகத்தில் தனது அழகிய தோகையை விரித்து ஆடிய மயிலைப் பார்த்து வான்கோழியும் தனது அருவருப்பான சிறகை விரித்து ஆடமுயன்றதாம் என்பதை நோக்கும் போது கல்லாதான் கற்ற கவி சிறப்பற்றது என்பது புலனாகின்றது. "மன்னரும் மாசறக் கற்றோரும் சீரதுக்கின் மன்னரிற் கற்றோன் சிறப்புடையோன். மன்னருக்கு தம் தேசமெல்லாம் சிறப்பில்லை. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்று ஔவையார் கற்றவர்களின் பெருமையைப் பாடுகின்றார். அதாவது மன்னருக்கு அந்த நாட்டில்தான் சிறப்பு ஆனால் கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.. சுருக்கமாகக் கூறின், உலகத்தில் மனிதர்களுக்குக் கல்விதான் மிகச் சிறந்த செல்வம். "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை" என திருவள்ளுவர் கூறுகின்றார். கல்வி கற்றவர்களிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி ஆகிய அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். நாம் கற்ற கல்வி எமது சமூகத்திற்கும், எமது பிரதேசத்திற்கும், முழு நாட்டுக்கும் பயன்படும் வகையில் அமைய வேண்டும்.

"எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மேல் வருக" என்பர். அதாவது இக்குறளில் ஏழைகள் அல்லது பணக்காரர்கள் என்பது அல்ல யாராயினும் எந்தக் குலத்தில் பிறந்தவனாயினும் நீ படித்திருந்தால் முன்னுரிமை என்கின்றார். மேலும் "மேற்பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலார் பாடு" வள்ளுவப்பெருந்தகை கூறுகின்றார். எனவே கல்வியானது மனிதனைச் சிறந்த ஒழுக்கமுள்ளவனாக மாற்றுகின்றது எனலாம். கல்வியினால் மட்டுமே உலக அறிவினை வளர்த்துக் கொள்ள முடியும்.

கல்வி தாய்போல் தாலாட்டி தந்தை போல் கைகொடுத்து நம்மைப் பாதுகாக்கும். "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே"

"பிறப்பு ஓர் அன்னை உடன் வயிற்று உள்ளும், சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும், ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது, அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும், வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே" என்று கூறுகின்றது. புறநானூறு, ஒருதாய் ஒரு வயிற்றுப் பிறந்தவருள்ளும் அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுபவளாவாள்.

ஓர் குடி வந்த பலருள்ளும் மூத்தோனை வருக என்று அழையாது, அறிவுடையோனையே வருக என்று அரசனும் சென்று கேட்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும் கீழ் நிலையிலுள்ளவன் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லான் ஆயின் மேல் நிலையிலுள்ளவலும் அவலுக்கு ஆட்படுவான். இதனால் ஊறுபாடு நேர்த்தவிடத்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும் அதனால் நேரும் இழப்பு, வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாதும், முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். அதனால், சிறப்பும் அறிவும் நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயரலாம் எனப்பாடுகின்றார். பொருண்மொழிக் காஞ்சியில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் புறநானூற்றில் கூறுகின்றார். "எல்லா நலமும் ஈந்திடும் கல்வி இல்லா வீட்டை இருண்ட வீடு என்க! படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பின் துடிப்பிலார் நிறைந்த சுடு காடு என்க! அறிவே கல்வியாம், அறிவிலாக் குடும்பம் நெறி காணாது நின்றபடி விழும், சொத்தெல்லாம் விற்றும் கற்ற கல்வியாம் வித்தால் விளைவான மேன்மை இன்பம்! கல்வி இலான் கண் இலான் என்க" என்று கூறுகின்றார் பாரதிதாசன். அதாவது, மக்களிடம் மூடநம்பிக்கை வளர்வதற்குக் காரணம் கல்வி அறிவு இல்லாமையே என்பதை அறிந்தார் பாரதிதாசன், மூடநம்பிக்கை நிறைந்து காணப்படும் வீடு இருண்ட வீடு போன்றதாகும். அந்த இருண்ட வீட்டில் கல்வி ஒளியைப் பாச்சிட வேண்டும் எல்லோரும் கல்வியைக் கற்க வேண்டும் என்று பாடினார்.

மேலும், கல்வியின் சிறப்பைக் கூறும் போது "திய பண்பைத் திருத்திடும் கல்வி நல்ல பண்பைப் பொலிவுறச் செய்வதும் கல்வி" எனவே கல்வி மட்டுமே கற்பதற்கு வயது கிடையாது கற்கும் போது கல்வி கசப்பாக இருந்தாலும் கற்றபின் இனிப்பைத் தருவது கல்வியாகும். "எல்லா நலனும் ஈந்திடும் கல்வி இருண்ட வீடு எங்க" என்றும் "படிப்பிளார் நிறைந்த குடித்தனம் நரம்பில் துடிப்பிலார் நிறைந்த சுடுகாடெங்க" என்றும் "அறிவே கல்வியாம் அறிவிலார் குடும்பம் நெறி காணாமல் நின்றபடி விழும்" என்றார் பாரதிதாசன். பணக்காரக் குடும்பமாக இருக்கலாம். ஆனால், பிள்ளை படிக்காது தந்தை கஷ்டப்பட்டு பணம் சம்பாதிப்பார். அடுத்த தலைமுறையில் நின்றபடி விழும். நெறி காணாமல் இருக்கிற இடம் தெரியாமல் போய்விடும். ஏழைக் குடும்பமாக இருக்கலாம். பிள்ளைகள் நன்றாகப் படித்திருந்தால் ஆலமரத்தைப் போல் விழுது விட்டு வளரும். படிக்கவில்லை என்றால் அது அனைத்து துன்பங்களுக்கும் ஆணிவேராக அமையும். "கல்வி இல்லாததால் அறிவை இழந்தோம். அறிவில்லாததால் வேலையை இழந்தோம். வேலை இல்லாததால் பணத்தை இழந்தோம்.

பணம் இல்லாததனால் ஏழைகளானோம்" என்றும் "கையெழுத்துப் போடக்கூடக் கல்வி அறிவு இல்லாமல் கட்டை விரல் முத்திரையில் கதைகள் நடக்குதடி" என்கிறார் வட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். "கால் வைற்றுக் கஞ்சியிலார் இதன் காரணம் என்னதென அறிவுமிலார்" என்கிறார் பாரதி. மேலும் வயிற்றுப் பசிக்குக் காரணமும் கல்வி அறிவு இல்லாததுதான் காரணமெனக் கூறுகின்றார்.

மேலும் தோழர் ஜீவா "காலுக்குச் செருப்புமில்லை கால் வயிற்றுக் கூழுமில்லை பாலுக்கு உழைத்தோமடா பசியற்றுப் போனோமடா" எனக் கூறுகின்றார். நாம் படிக்கவில்லை என்றால், உடல் உழைப்பினை மட்டும் நம்பி மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து போகின்ற உழைப்பாளிகளிலே ஒருவராகச் சேர்ந்து விடுவார்கள். அறிவைப் பயன்படுத்தி பிள்ளைகள் படிக்க வேண்டுமென்றால், இந்த சமுதாயத்தை வெற்றி கொள்ள வேண்டுமென்றால், உலகத்தை வெல்ல வேண்டுமென்றால், பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமென்றால் பிள்ளைகள் படித்தேயாகவேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.





# அரசியலில் இனிமேல் "இனவாதத்துக்கு இடமில்லை"

நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை (2024-11-21) ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆற்றிய உரை...

இன்று எமது பாராளுமன்றத்தில் சிறப்புக்குரிய நாள். அதிகாரம் இரு குழுக்களுக்கு கைமாறிய வண்ணம் இருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது தரப்புக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. இலங்கை வரலாற்றில் அது முக்கியமானது. எமது நாட்டின் தேர்தல் முறையில் அதிகளவான எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மலையகம் தெற்கு என அனைத்து மாகாணங்களும் மக்களும் அதற்கு பங்களிப்பு செய்துள்ளன.

இவ்வளவு காலமும் மாகாணங்கள், தேசியத்துவம், மதங்கள் என்ற அடிப்படையிலேயே அரசியல் கட்சிகள் உருவாகின. அதனால் மக்கள் இடையே பிரிவினை, சந்தேகம், இனவாதம் என்பன வலுவடைந்தன. ஒரு தரப்பில் இனவாதம் வலுவடையும் வேளையில் அதற்கு எதிராக மாற்றுத் தரப்பிலும் இனவாதம் வலுப்பெறும். இனவாதம் ஒரே இடத்தில் இருக்காது. அது பற்றிய வரலாற்றை எமது நாட்டிலும் அரசியலும் சமூகத்திலும் பார்ததிருக்கிறோம். ஆனால் அனைத்து இன மக்களும் எம்மை நம்பிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

எம்மை நம்பாமல் ஏனைய கட்சிகளை நம்பும் மக்கள் உள்ளனர். அது ஜனநாயகம் ஆகும். தனியொரு கட்சியை சூழ்ந்து மக்கள் செயற்பாடுகளை உருவாக்குவது ஜனநாயகமான அமையாது. பல நிலைப்பாடுகளை கொண்ட அரசியல் கட்சிகளின் இருப்புதான் ஜனநாயகமாகும். அதேபோல் பல்வேறு கொள்கைகளை கொண்ட அரசியல் குழுக்களின் இருப்பும் ஜனநாயகமாகவே அமையும். எனவே ஜனநாயக ஆட்சி என்ற வகையில் பல கட்சி அரசியலை நாம் வெறுப்பதில்லை. கொள்கை ரீதியாக அதனை ஆதரிப்போம். எமக்கு வாக்களித்த, வாக்களிக்கான அனைத்து மக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்ய கடமையைப் பட்டிருக்கிறோம். தேர்தலால் மக்களுக்கும் எமக்கும் ஒரு பிணைப்பு ஏற்படுகிறது. தேர்தல் காலத்தில் நாம் எமது கொள்கை பிரகடனத்தை முன்வைக்கிறோம் அதன் மீது நம்பிக்கை கொள்ளும் மக்கள் எமக்கு வாக்களிகின்றனர். எனவே அந்த பிணைப்பில் மக்கள் தமது பங்கை செய்துவிட்டனர். பங்குக்கு எமக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர். தற்போது நாம் எமது பங்கை ஆற்ற வேண்டிய தருணம் வந்துள்ளது.

எனவே நானும் எமது அரசாங்கமும் மக்கள் நம்பிக்கை எவ்வகையிலும் சிதைந்துபோக இடமளியாமல்,இந்த ஆட்சியை கொண்டுச் செல்ல கடமைப் பட்டிருக்கிறோம். அதற்கு நாம் பொறுப்புக்கூறுவோம். பிரதேசம், கலாசார அடிப்படையில் மாற்றங்கள் இருந்தாலும் வெவ்வேறு மொழிகளை பேசினாலும் வெவ்வேறு மதங்களை பின்பற்றினாலும் இந்த தேர்தலில் ஒரே நோக்கத்திற்காக ஒன்றிணைந்ததை காண்பித்திருக்கிறோம். எனவே எமது நாட்டு மக்கள் நீண்ட கால கனவாக காணப்பட்ட தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது. அரசியல் ரீதியாக எமக்கு பல நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால், இனி இந்த நாட்டில் இனவாத அரசியலுக்கு இடமில்லை. எந்த விதத்திலும் மதவாதச் செயற்பாடுகள் எழுச்சி பெறுவதற்கும் இடமளியோம். நாம் போதுமென்ற அளவில் இனவாதத்தினால் பாதிப்பை கண்டிருக்கிறோம். ஆறுகள் நிறைய கண்ணீரை கண்டிருக்கிறோம். இன்று நாட்டில் ஒவ்வொருவர் இடையிலும் குரோதமும் சந்தேகவும் அதிகளவில் வலுப்பெற்றுள்ளது. இன்று இந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாம் எமது எதிர்கால சந்ததிக்கு அவ்வாறான நாட்டை கையளிக்க கூடாது என்ற பொறுப்புடன் செயற்பட வேண்டும். அரசியல் செய்ய பல போராட்ட வடிவங்கள் இருக்கலாம்.



பொருளாதாரம்,ஜனநாயகம், என்று பல வகையில் இருக்கலாம். ஆனால், இனி எவரும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாத, மதவாத போராட்டங்களை முன்னெடுக்க இடமளியோம் என்று உறுதியளிக்கிறேன்.

இந்த மக்கள் ஆணையில் மற்றுமொரு எதிர்பார்ப்பு மறைந்திருந்தது. நாட்டில் நீண்டகாலமாக காணப்பட்ட முறையற்ற அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு தெரிவான நான் 24 வருடங்கள் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினேன். 24 வருடங்களும் இந்த பாராளுமன்றம் மக்கள் வெறுப்பை தேடிக்கொண்ட காட்சிகளை கண்ணால் கண்டிருக்கிறேன். பாராளுமன்றம் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததை பார்த்திருக்கிறோம். சபைக்குள்ளும் சபைக்கு வெளியில் உள்ள மக்கள் மத்தியிலும் இந்த உயர் சபை தொடர்பிலான நம்பிக்கை படிப்படியாக அற்றுப் போனது. உயர்வான ஒரு சபையில் இருந்துகொண்டு மக்களை புறக்கணிக்கும், மக்கள் வெறுப்பை தூண்டும், மக்களால் விரட்டியடிக்கப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். அவ்வாறானதொரு பாராளுமன்றம் இந்த நாட்டை ஆள்வதற்கு பொருத்தமானதாக அமையுமென நான் நம்பவில்லை. நாட்டுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும் பொருத்தமானது அல்ல. இனியும் மக்களின் நிதி அதிகாரத்தை கையாள்வதற்கு அந்த பாராளுமன்றம் பொருத்தமற்றது. மக்கள் நிதியை கையாளும் அதிகாரம் பாராளுமன்றத்திடமே உள்ளது. மக்களுக்கான சட்டங்களை இயற்றும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது.

எனவே, தொடர்ந்தும் மக்களிடம் இருந்து தூரமான பாராளுமன்றமாக இருக்க முடியாது. இந்தப் பாராளுமன்றத்தின் கௌரவம் மற்றும் பாராளுமன்றத்தின் மீயுர்வை பாதுகாக்க வேண்டும். இந்தப் பாராளுமன்றம் பெருமளவான புதிய பாராளுமன்ற உறுப்பினர்களால் நிறைந்துள்ளது. அவர்களுக்கு நல்ல பழக்கங்களை துரிதமாக வழங்கக் கூடிய பாராளுமன்றம் இது. புதிய சபாநாயகரும் பணிக்குழாமும் தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் அனைவரும் இந்த பாராளுமன்றத்தை மீளக்கட்டமைக்க ஒத்துழைப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். அவ்வாறு ஒத்துழைக்காவிட்டால் தொடர்ந்தும் மக்களுக்கு மறைவான குகையாக இருக்கக் கூடாது. இந்தப் பாராளுமன்றத்தில் போதுமான நவீன தொழில்நுட்ப முன்னேற்த்திற்கு அமைய நாளாந்தம் நடக்கும் அனைத்தும் மக்களுக்கு வெளிப்படையாக இருக்கும். மக்களுக்கு மறைவான நிலையமாக இந்தப் பாராளுமன்றம் இருக்காது.

மக்களுக்கு வெளிப்படையான நிலையமாக மாற்ற நாம் தொடர்ந்தும் முயன்று வருகிறோம். நாம் அனைவரும் மக்கள் பிரதிநிதிகளாயின் நாம் பேசும் விடயம்,நடத்தை,வெளியிடும் கருத்து என அனைத்தும் மக்கள் முன்னிலையில் ஆராயப்படுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எமக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது தான் இறுதிமுடிவு என நான் யாராவது நினைப்பதாக இருந்தால் அது இறுதியானதல்ல. அடுத்த அதிகார பரிமாற்றம் வரை மற்றும் அடுத்த மக்கள் ஆணை உரசிப்பார்க்கப்படும் வரை எம்மை பரீட்சித்துப் பார்க்கும் அதிகாரம் மக்களுக்குள்ளது. இந்த பாராளுமன்றம் எதிர்வரும் சில வருடங்களில் மக்களின் பரிசோதனையில் சித்தியடைந்த பாராளுமன்றமாகும் என கருதுகிறேன். அதற்கு சபாநாயகரினதும் எம்.பிகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

இலங்கை வரலாற்றில் அரச ஊழியர்கள் அதிகமாக அரசாங்கத்திற்கு வாக்களித்த தேர்தல் என்பதை இந்த மக்கள்ஆணையில் நாம் காண்கிறோம். எமது அரச சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் நல்ல மனப்பாங்கு கிடையாது. அரச சேவை தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் சில பாதகமாக எண்ணங்கள் காணப்படுகிறது. அரச சேவையில் இருப்போருக்கு தமது பணி தொடர்பிலும் திருப்தி கிடையாது. அதனால், மக்களை திருப்திப்படுத்தாத அரச சேவையும் சேவையில் ஈடுபட்டுள்ளோர் திருப்தி அடையாத அரச சேவையும் தான் எம்மத்தியில் எஞ்சியுள்ளது. அதனால் இரு தரப்பிலும் திருப்தியான அரச சேவையை உருவாக்குவது எமது முழுமையான பொறுப்பாகும்.

இந்த மக்கள் ஆணையின்போது, சிறந்த அரச சேவைக்காக எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் மறுசீரமைப்புகளுக்கான அவர்களின் பக்கசார்பை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எமக்கு பலமான அரச சேவையின்றி முன்னோக்கிச் செல்ல முடியும் என்று நாம் கருதவில்லை. உலகில் அனைத்து நாடுகளும் புதிய திருப்புமுனையின் போதும் அரசியல் தலைமையின் வழிகாட்டலைப் போன்றே அரச துறையின் செயற்பாடும் முக்கியமானதாகிறது.

அரசியல் கட்சிகளுக்கு எத்தகைய எதிர்பார்ப்புகள் இலக்குகள் இருந்தாலும் அதற்கு உகந்த அரச சேவையொன்றை உருவாக்க முடிந்தால் மாத்திரமே அவற்றை சாத்தியமாக்க முடியும். அதனால், செயற்திறனான மக்களின் விருப்புக்கேற்ற அரச சேவை இந்த நாட்டில் மீண்டும் உருவாக்க நாம் எதிர்பார்க்கிறோம்.அதற்கு அரச சேவையில் இருந்தே பாரிய மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

விசேடமாக ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் தொடர்பில் நோக்கினால் அனைத்து பிரஜைகளுக்கும் தாம் பின்பற்றும் மதம், மொழி மற்றும் கலாசாரத்திற்கு அமைய தனிமைப்படத் தேவையில்லை. தாம் பின்பற்றும் மதம் தனக்கு மேலதிக அழுத்தத்தைத் கொடுப்பதாக எண்ணத் தேவையில்லை. தமது கலாசாரம் தனக்கு மேலதிக அழுத்தம் தருவாத நினைக்கத் தேவையில்லை. தாம் ஆதரிக்கும் அரசியல் மேலதிக அழுத்தம் கொடுப்பதாக கருதத் தேவையில்லை. அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம். ஒவ்வொரு இனக் குழுக்களுக்குமிடையில் தமக்கென தனித்துவங்கள் இருக்கலாம். ஆனால் சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது. எனவே, அச்சமோ சந்தேகமோ இன்றி ஜனநாயக நாடொன்றை உருவாக்குவது எமது பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவோம் என உங்களுக்கு உறுதியளிக்கிறோம்.

அந்தப் பொறுப்பில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வது பிரதானமானதாகும். சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதென்பது பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் சட்டங்களின் ஊடாக மாத்திரமல்ல. இந்தப் பாராளுமன்றத்தில் பல்வேறு சமயங்களில் நீண்ட கலந்துரையாடல்கள்,தொடர்ச்சியான விவாதங்களின் ஊடாக முன்போக்கான சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். சட்டங்களை நிறைவேற்றுவது மாத்திரம் போதுமானதல்ல.அவற்றை உரிய வகையில் அமுல்படுத்த வேண்டும்.

அதே போன்று சட்டம் முறையாக அமுல்படுத்தப்படுகிறது என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும். கடந்த காலங்களில் சட்டம் தொடர்பான மக்களின் நம்பிக்கை தகர்ந்துள்ளது. தமக்கு ஏதாவது அநீதி நடந்தால் சட்டத்தின் முன்பாக சென்று நியாயத்தை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. தமக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டால் அந்த அநீதிக்காக சட்டத்தின் ஆதரவை பெற முடியும் என்ற நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. பொதுக்கள் மத்தியில் சட்டம் மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பிலான நம்பிக்கை வீழ்ச்சியடைந்திருக்கிறது. சட்டம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்தாமல் நல்லாட்சியொன்றை கட்டியெழுப்ப முடியும் என்று நாம் கருதவில்லை. சிறந்த ஆட்சியொன்றை உருவாக்குவதற்கு சட்டத்தின் ஆட்சி அதில் பிரதான அம்சமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நாம் அரசு என்ற வகையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் சட்டத்திற்கு உட்பட்டுள்ளன. எந்தவொரு அரசியல்வாதியோ அதிகாரம் உள்ள எவருமோ இனிமேல் சட்டத்தை விட உயர்வாக இருக்கமாட்டார். அனைவரும் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும். அதேபோன்று, சட்டம் மீதான மக்களின் வீழ்ச்சியடைந்த நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதில், எவரிடமும் பலிவாங்கவோ துரத்திச் சென்று வேட்டையாடும் நோக்கமோ எமக்குக் கிடையாது. அனைவரினதும் அரசியல் செய்யும் சுதந்திரத்தை உறுதி செய்வோம். ஆனால், நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்திய பல குற்றச் செயல்கள் உள்ளன. அவை காலத்தில் போக்கில் மூடிமறைக்கப்படும் என குற்றவாளிகள் நினைத்தால் அது சட்டம் தொடர்பான மக்களின் நம்பிக்கையை வீழுச்சியடையச் செய்வதாக அமையும். சட்டம் தொடர்பான மக்களின் நம்பிக்கையை உறுதி செய்வதாக இருந்தால் சர்ச்சைக்குரிய குற்றச் செயல்கள் தொடர்பில் மீள விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு நிதியும் குற்றவாளிகளுக்கு தண்டனையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். பல்வேற சந்தர்ப்பங்களில் நாட்டில் நடந்துள்ள குற்றச் செயல்கள் அரசியல் மேடைகளில் அரசியல் கோசங்களாக பயன்படுத்தப்பட்டன. ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் அது தொடர்பில் நியாயத்தை நிலைநாட்ட தவறியுள்ளன. சர்ச்சைக்குரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையோரை அம்பலப்படுத்துவோம். அவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவோம். பாதிக்கப்பட்டோருக்கு நியாயத்தை நிலைநாட்டுவோம் என உங்களுக்கு உறுதியளிக்கிறோம். சட்டம், நியாயம் என்பன நிலைநாட்டப்படும் ஆட்சியொன்று எமக்கு அவசியம். அதனை இந்த மக்கள் ஆணையிலாவது நிலைநாட்ட தவறினால் மீள அவ்வாறான ஆட்சிதொடர்பில் கனவு காண்பதில் எந்தப் பயனும் இல்லை.

இந்த மக்கள் ஆணையில் அந்த நோக்கம் உள்ளது. அந்த ஒப்பாரி உள்ளது. இந்த மக்கள் ஆணையில் தமது இறந்த தமது உறவினரின் வெளிப்பாடு உள்ளது. கொலை செய்யப்பட்டவர்களின் நண்பர்களின் ஒப்பாரி இந்த மக்கள் ஆணையில் இருக்கிறது. அவர்களுக்கு நாம் நியாயத்தை நிலைநாட்டாவிட்டால் யார் நிறைவேற்றப் போகிறார்கள்.யாருக்குப் பொறுப்புக் கொடுக்க முடியும்?

தொடர்ச்சி P9

## அரசியலில் இனிமேல்

# "இனவாதத்துக்கு இடமில்லை"

அவற்றை நிறைவேற்றாவிட்டால், நீதி,நியாயம் தொடர்பிலான கனவுகள் இந்த நாட்டில் மடிந்து போகும். கனவில் கூட நீதி,நியாயம் தொடர்பான எதிர்பார்ப்பு நாட்டுமக்கள் மத்தியில் ஏற்படும் என நினைக்கவில்லை. அதனால் நீதி,நியாயம் இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். குற்றங்கள் தொடர்பிலும் ஊழல் மோசடி தொடர்பிலும் சட்டத்தை நிலைநாட்டி சட்டத்தின் ஆட்சியையம் சட்டம் தொடர்பான மக்களின் நம்பிக்கையையும் மீள உறுதிப்படுத்துவோம். அதனை நிறைவேற்ற வேண்டும். அதனை நாம் செய்யாவிட்டால் யார் செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி எம்முன் உள்ளது.

இந்த ஆட்சி எமக்குக் கிடைத்த போது நாம் எதிர்க்கட்சி அரசியலில் ஈடுபட்டிருந்தோம். பொருளாதாரத்தின் ஆழத்தை நாம் அறிந்திருந்தோம். எமது பொருளாதாரம் பெரும் ஆழத்தில் பாரிய பரப்பில் சிக்கியிருக்கிறது. மிகச்சிறிய நூலொன்றில் தொங்கிக் கொண்டிருக்கும் பொருளாதாரம் தான் எம்முன் உள்ளது. இந்தப் பொருளாதாரத்தினால் பாரிய அதிர்ச்சிகளை தாங்க முடியாது. இப்பொருளாதாரத்திற்கு பாரிய திருப்பங்கள் சரிவராது. அதனால் ஆட்சிக்கு வந்தவுடன் பொருளாதார ஸ்தீரத்தன்மை மற்றும் பொருளாதாத்துடன் தொடர்புள்ள குழுக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்துவது எமது எதிர்பார்ப்பாக இருந்தது. பொருளாதார நெருக்கடியின் அளவின் காரணமாக எமது சிறு தவறும் பாரிய விளைவை ஏற்படுத்தும். சிறு அதிர்ச்சியும் இந்த பொருளாதாரத்திற்கு ஒத்துவராது. எனவே இந்தப் பொருளாதாரத்தை வீழ இடமளிக்காத வகையில் சகல சந்தர்ப்பங்களிலும் அனைத்து முடிவுகளையும் சகல கோணங்களிலும் சிந்தித்து மிகவும் மென்மையாக எடுக்க வேண்டியுள்ளது.

எமக்கு தவறு செய்வதற்காக வாய்ப்பை இந்த பொருளாதாரம் வழங்கவில்லை. எனவே இந்தப் பொருளாதாரத்தை வழிநடத்துகையில் மென்மையான அனைத்து இடங்கள் குறித்தும் சிந்தித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்க வேண்டும்.

அதன் படி நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டிய ஆட்சியே கிடைக்கும் என்பதை கூறியிருந்தோம். அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டினை எட்டியுள்ள ஒரு நாட்டிற்கு அந்த ஒப்பந்தத்தை விடுத்துச் செல்ல முடியாது என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம். அதன்படி, சர்வதேச நாணயநிதிய உடன்பாடுகளுக்கு அமைவாக பொருளாதாரத்தை கையாள்வதாக பொதுத் தேர்தலில் மக்களுக்கு உறுதியளித்தோம். அதன்படி, பல செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம். தற்போது மூன்றாவது மீளாய்வுக் கூட்டம் தாமதமாகியுள்ளது. இதனை செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கவேண்டியிருந்தது. மூன்றாவது மீளாய்வுக் கூட்டத்தை ஆரம்பிக்க சில காலம் பிடித்தது. பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் கடந்த 17ஆம் திகதி சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். கடன் மறுசீரமைப்பு குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்த வாரத்திற்குள் பணியாளர் மட்ட ஒப்பந்ததில் 23ஆம் திகதி கைச்சாத்திட முடியம் என எதிர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான பயணத்தில் அதில் முக்கியமாக முன்னெடுப்பாகும். கடன் மறுசீரமைப்பும் அதனுடனான உடன்பாடுகளில் அடங்குகிறது.

நாம் ஆட்சியை பொறுப்பேற்ற போது கடன்மறுசீரமைப்பு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. வர்த்தக சந்தையில் பிணைமுறி தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் அதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டதாக ஊடகங்களின் ஊடாக அறிந்தோம். இருவருடங்களுக்கு மேலாக பேச்சுகள் நடைபெறுகிறது. கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்யாமல்பொருளாதாரத்தை முன்னெடுப்பது சிரமமானது. கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களின் இறுதிக்கட்டமே நாம் ஆட்சிக்கு வருகையில் காணப்பட்டது. அந்த முன்னெடுப்புகள் சாதகமானதா பாதகமானதா என தற்பொழுது விவாதிப்பதில் பயனில்லை. அது தான் யதார்த்தம். விரைவில் ஒவ்வொரு நாடுகளுடனும் தனித்தனியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம். வர்த்தகக் கடன் தொடர்பில் ஆரம்ப கட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் அந்த பணிகளை நிறைவு செய்ய முடியும் எனநம்புகிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான கடன்மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாட்டை இவ்வருடத்திற்குள் வெற்றிகரமாக நிறைவுசெய்ய இயலுமாகும். பணியாளர் மட்ட உடன்பாடு இவ்வாரம் எட்டப்படுவதோடு பொருளாதாரத்தை நம்பகமான நிலைக்கு கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும்.



நாம் கொள்கை ரீதியில் எமது பொருளாதாரம் எதிர்கொண்டுள்ள ஆழமான நெருக்கடிகளுக்கு இந்த நிகழ்ச்சிநிரல் மாத்திரம் போதுமானது என கருதவில்லை. எமது நிதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இந்த செயற்பாடுகள் போதுமானதாக இருக்கும். ஆனால் எமது பொருளாதார முறைமை பாரிய சரிவை கண்டிருக்கிறது. எமது பொருளாதாரத்திற்கு பாரிய மூலோபாய எழுச்சி அவசியம்.அதில் மூன்று அம்சங்கள் அடங்கும். எமது பொருள் சேவைகள் உற்பத்தித் துறையில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்கை மேல்மாகாணம் வழங்குகிறது. அது போலவே, ஏனைய பகுதி மக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியப்படுகிறது. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதாரத்தில் மக்களின் பங்களிப்பும் அவசியம். மக்களை கைவிட்டுச் செய்யும் பொருளாதார அபிவிருத்தியில் பயனில்லை. மக்களளை மனிதத் தூசிகளாக்கும் பொருளாதாரத்தில் பயனில்லை. அனைத்து பொருளாதார செயற்பாடுகளிலும் மக்களை பங்குதாரர்களாக்க வேண்டும். அனைத்து மக்களையும் பொருளாதாரத்தில் பங்குதாரர்களாக்காமல் அதன் நன்மை மக்களை சென்றடையாது. தேசிய நிதி சிறு குழுவின் கைகளில் மாத்திரம் இருக்குமானால் அது அரசாங்கத்திலோ பொருளாதாரத்திலோ ஸ்தீர நிலையை ஏற்படுத்தாது. இயற்கை வளங்கள் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அனைவரும் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புகையில் அது சிறு குழுவின் கரங்களுக்கு செல்லுமானால் பொருளாதாரப் பயனம் ஸ்தீரமடையாது. சமூகமும் வலுவடையாது. பொருளாதாரத்தின் பயன் நியாயமாக மக்களை சென்றடைய வேண்டும்.

சந்தையைக் கையாள்வது தொடர்பிலும் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எமது நாடு பாரிய சந்தையுள்ள இடமல்ல. சந்தையில் ஏகபோக உரிமை காணப்படுகிறது. நாளாந்த அரிசிப் பயன்பாடு 6,500 மெற்றிக் தொன்களாகும். சிறிய சந்தைகளில் ஏகபோக உரிமை உருவாகலாம். பொருளாதார அடிப்படையில் எமது சந்தை நிர்ணயிக்கப்படவில்லை. ஏகபோக உரிமைப்படித்தான் எமது சந்தை நிர்ணயிக்கப்படுகிறது. பொருட்களின் விலைகளை ஏற்றி இறக்க அவர்களால் முடியும். நெல் விலையை கூட அவர்களால் நிர்ணயிக்க முடிகிறது. அரிசி விலையையும் அவர்களால் தீர்மானிக்க முடியும். இதனால் பொருட்கள் சேவைகளை பெற பாரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மீளவும் சந்தையின் போக்கை மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். மக்களுக்கு நியாயமான முறையில் பொருட்கள் சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதனை அரசாங்கம் மீற முடியாது. போட்டித்தன்மை ஊடாக இதனை செய்ய முடியும். விலைகளை நிர்ணயிக்கலாம். ஆனாலும் சில துறைகளை மேற்பார்வை ஊடாக கையாளலாம். பாராளுமன்றத்தின் ஊடாக நிர்ணயச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.சந்தைகளிலுள்ள திரிபுநிலையை சீர் செய்ய அவை போதுமானது. அது தொடர்பான சட்டங்கள் போதுமானதா என பார்க்க வேண்டும். சில துறைகளை நாம் கையாள வேண்டும். சில துறைகள் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை. அவை அரச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். வலுசக்தி சந்தையை கையாளுகையில் அரசின் பங்கும் இருக்க வேண்டும்.அவை பொருளாதாரத்தில் முக்கியமானவை. இவற்றில் ஏற்படும் சில தடுமாற்றங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, அவ்வாறான துறைகளிலும் அரசாங்கத்தின் வகிபாகம் ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் அறிந்துள்ளோம்.

அதேபோன்று, நிதித்துறை சுதந்திரமாக செயற்பட ஆரம்பித்தால் என்ன நடக்கும். மத்திய வங்கி மேற்பார்வை நிறுவனமாக செயற்படுகிறது. நிதிச் சந்தையிலும் அரச வகிபாகம் இருக்க வேண்டும்.

அடுத்து, பரவலடைந்து காணப்படும் சந்தைகளுக்கு பதிகால ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக கூட்டுறவுச் அமைப்பை வலுவானதாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம்.சந்தையில் பலமான போட்டியாலராக கூட்டுறவுத்துறையை பயன்படுத்த இருக்கிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவதற்காக சில துறைகளை அடையாளங் கண்டுள்ளோம். சுற்றுலாத் துறையில் பெரும் பாய்ச்சலை செய்யக்கூடிய இயலுமை தொடர்பில் அறிந்துள்ளோம். அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் 8 பில்லியன் டொலர் பெறுமதியான சுற்றுலா பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கும் எதிர்பார்த்திருக்கிறோம். 2018 இல் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

அடுத்ததாக, தகவல் தொடர்பாடல் துறை உலகின் அனைத்து தொழில் துறைகளிலும் தாக்கம் செலுத்துகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்கள் நாட்டுக்கு அவசியம். தற்போது எமது நாட்டில் 85 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப தொழில்துறையினர் மாத்திரமே உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை 5 வருடங்களில் 2 இலட்சமாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். தகவல் தொழில்நுட்பத்துறை ஏற்றுமதி வருமானம் குறைவாகவே உள்ளது. 5 பில்லியன் டொலர் வருமானத்தை பெறும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஐந்து துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அதற்காக கல்வி, மொழி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்.



இன்றும் உலக துறைமுகங்கள் கொழும்பு துறைமுகம் வரிசையில் முன்னணி வகிக்கிறது. அமைவிடத்தின் வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பலமான வர்த்தக கப்பல்துறை மத்திய நிலையமாக அதனை மாற்ற வேண்டும். சேவைப் பெறுநர்களுக்கு உரிய வகையில் சேவை கிடைக்கிறதா என்ற கேள்வி உள்ளது. எமது துறைமுகங்களின் இயற்கை அமைவிடமே எமது வலுவாகும். அதனால் எமது



துறைமுகத்தை வலுவான பொருளாதார மையமாக மாற்றியமைப்பதற்கான பாரிய திட்டம் உள்ளது.

நாட்டில் மிகப்பெரிய விவசாய துறை இருந்தாலும், கடனாளிகளான விவசாயிகளே இன்று நாட்டில் இருக்கின்றனர். விவசாய துறைக்காக நாம் பெருமளவில் முதலீடு செய்திருக்கிறோம். விவசாயத்துறை ஆய்வுகளுக்கு அதிக நிதி செலவிடப்படுகிறது. ஆனால் விவசாயிகள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். சுகாதாரம், கல்வி, இருப்பிடம் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, வறுமையின் பிடியிலும் சிக்கித் தவிக்கின்றமை பெரும் சமூக பிரச்சினையாகும். விவசாயத்துறை சார் வறுமை பாரிய சமூக அவலமாக மாறியுள்ளது. எனவே, விவசாய துறையிலும் பெரும் பாய்ச்சலை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்காக விதை உற்பத்தி நிலையங்களை மீள ஆரம்பிக்க வேண்டியது அவசியம். விவசாய சேவை நிலையங்களை வலுவூட்ட வேண்டும். இலங்கைக்குள் மாத்திரமின்றி, ஏற்றுமதியை இலக்கு வைத்த விவசாய உற்பத்திகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, விவசாயத்துறையில் பாரிய பாய்ச்சலை மேற்கொள்வோம். விவசாயத்தை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பகுதியாக மாற்றியமைக்க வேண்டும்.

ஹெக்டயாருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்ட பசளை நிவாரணத்தை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளோம். மேலும் நிவாணம் வழங்க வேண்டிய துறைகளுக்கு வழங்க இருக்கிறோம்.

அதேபோல, மீன்பிடித்துறையை பலப்படுத்த வேண்டும். எரிபொருள் பிரச்சினையால் படகுகள் கரைகளில் கிடந்தன.படகுகளை மீள கடலுக்கு அனுப்புவதற்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். அதற்கான எமது நீரியல் வளங்களை பெறுமதிசேர் வளங்களாக மாற்றியமைக்கும் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தியிருக்கிறோம்.

கனிய வளங்களை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். தனியார்த் துறையினரையும் அந்த பணியில் கைகோர்த்துக்கொள்வோம். அது எமது பொருளாதாரத்தில் புதிய திருப்பு முனையாக அமையும் என்று நம்புகிறோம்.

அடுத்ததாக விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் துறை. உலகின் வளர்ச்சி கண்ட அனைத்து நாடுகளும் புதிய கண்டுபிடிப்புக்கான ஆய்விற்காக பெருமளவான நிதியை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்குகின்றன. புதிய உற்பத்தி மற்றும் விநியோகச் சேவைகளினால் மாத்திரமே புதிய சந்தை உருவாகும். எனவே, விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் மூலமும் மிகப்பெரிய பாய்ச்சல் ஒன்றை செய்ய எதிர்பார்க்கிறோம். ஆசியாவில் பல நாடுகள் இந்தத் துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன. இது சார்ந்த புதிய சந்தையில் பங்காளராக நாம் தவறிவிட்டோம். சம்பிரதாய முறைகளிலே தொடர்ந்து இருக்கிறோம். அந்த துறைசார் முக்கியஸ்தர்கள் பலரும் அதற்கான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். இந்தத் துறையில் பாரிய முன்னெற்த்தை எட்ட எதிர்பார்க்கிறோம்.

டிஜிட்டல் மயமக்கல் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்திற்கு பங்களிக்க ஹான்ஸ் விஜேசூரிய முன்வந்துள்ளார். நாட்டை முன்னேற்றுவதில் டிஜிட்டல்மயமாக்கல் முக்கியமானது. அந்த இலக்குகளை அடைந்துகொள்ள அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றும்..

அதன்படி, நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டிய ஆட்சியே கிடைக்கும் என்பதை கூறியிருந்தோம். அதனால், சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டினை எட்டியுள்ள ஒரு நாட்டிற்கு அந்த ஒப்பந்தத்தை விடுத்துச் செல்ல முடியாது என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

அதன்படி சர்வதேச நாணயநிதிய உடன்பாடுகளுக்கு அமைவாக பொருளாதாரத்தை கையாள்வதாக பொதுத் தேர்தலில் மக்களுக்கு உறுதியளித்தோம். அதன்படி, பல செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம். தற்போது மூன்றாவது மீளாய்வுக் கூட்டம் தாமதமாகியுள்ளது. இதனை செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. மூன்றாவது மீளாய்வுக் கூட்டத்தை ஆரம்பிக்க சில காலம் பிடித்தது. பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் கடந்த 17ஆம் திகதி சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். கடன் மறுசீரமைப்பு குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்த வாரத்திற்குள் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில் 23ஆம் திகதி கைச்சாத்திட முடியும் என எதிர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான பயணத்தில் அதில் முக்கியமாக முன்னெடுப்பாகும். கடன் மறுசீரமைப்பும் அதனுடனான உடன்பாடுகளில் அடங்குகிறது. நாம் ஆட்சியை பொறுப்பேற்ற போது கடன்மறுசீரமைப்பு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

வர்த்தக சந்தையில் பிணைமுறி தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் அதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டதாக ஊடகங்களின் ஊடாக அறிந்தோம். இருவருடங்களுக்கு மேலாக பேச்சுகள் நடைபெறுகிறது.கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னெடுப்பது சிரமமானது. கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களின் இறுதிக்கட்டமே நாம் ஆட்சிக்கு வருகையில் காணப்பட்டது. அந்த முன்னெடுப்புகள் சாதகமானதா பாதகமானதா என தற்பொழுது விவாதிப்பதில் பயனில்லை.அது தான் யதார்த்தம். விரைவில் ஒவ்வொரு நாடுகளுடனும் தனித்தனியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம்.

வர்த்தகக் கடன் தொடர்பில் ஆரம்ப கட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் அந்த பணிகளை நிறைவு செய்ய முடியும் என நம்புகிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாட்டை இவ்வருடத்திற்குள் வெற்றிகரமாக நிறைவுசெய்ய இயலுமாகும். பணியாளர் மட்ட உடன்பாடு இவ்வாரம் எட்டப்படுவதோடு பொருளாதாரத்தை நம்பகமான நிலைக்கு கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும்.

நாம் கொள்கை ரீதியில் எமது பொருளாதாரம் எதிர்கொண்டுள்ள ஆழமான நெருக்கடிகளுக்கு இந்த நிகழ்ச்சிநிரல் மாத்திரம் போதுமானது என கருதவில்லை. எமது நிதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இந்த செயற்பாடுகள் போதுமானதாக இருக்கும். ஆனால், எமது பொருளாதார முறைமை பாரிய சரிவை கண்டிருக்கிறது. எமது பொருளாதாரத்திற்கு பாரிய மூலோபாய எழுச்சி அவசியம். அதில் மூன்று அம்சங்கள் அடங்கும். எமது பொருள் சேவைகள் உற்பத்தித் துறையில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்கை மேல் மாகாணம் வழங்குகிறது. அது போலவே ஏனைய பிரதேச மக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியப்படுகிறது. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதாரத்தில் மக்களின் பங்களிப்பும் அவசியம். மக்களை கைவிட்டுச் செய்யும் பொருளாதார அபிவிருத்தியில் பயனில்லை. மக்களை மனிதத் தூசிகளாக்கும் பொருளாதாரத்தில் பயனில்லை. அனைத்து பொருளாதார செயற்பாடுகளிலும் மக்களை பங்குதாரர்களாக்க வேண்டும். அனைத்து மக்களையும் பொருளாதாரத்தில் பங்குதாரர்களாக்காமல் அதன் நன்மை மக்களை சென்றடையாது. தேசிய நிதி சிறு குழுவின் கைகளில் மாத்திரம் இருக்குமானால், அது அரசாங்கத்திலோ பொருளாதாரத்திலோ ஸ்தீர நிலையை ஏற்படுத்தாது. இயற்கை வளங்கள் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அனைவரும் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புகையில் அது சிறு குழுவின் கரங்களுக்கு செல்லுமானால் பொருளாதாரப் பயணம் ஸ்தீரமடையாது. சமூகமும் வலுவடையாது. பொருளாதாரத்தின் பயன் நியாயமாக மக்களை சென்றடைய வேண்டும்.

சந்தையைக் கையாள்வது தொடர்பிலும் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எமது நாடு பாரிய சந்தையுள்ள இடமல்ல. சந்தையில் ஏகபோக உரிமை காணப்படுகிறது. நாளாந்த அரிசிப் பயன்பாடு 6,500 மெற்றிக் தொன்களாகும். சிறிய சந்தைகளில் ஏகபோக உரிமை உருவாகலாம். பொருளாதார அடிப்படையில் எமது சந்தை நிர்ணயிக்கப்படவில்லை. ஏகபோக உரிமைப் படித்தான் எமது சந்தை நிர்ணயிக்கப்படுகிறது. தொடர்ச்சி P10

## அரசியலில் இனிமேல்

# “இனவாதத்துக்கு இடமில்லை”

பொருட்களின் விலைகளை ஏற்றி இறக்க அவர்களால் முடியும். நெல் விலையை கூட அவர்களால் நிர்ணயிக்க முடிகிறது. அரிசி விலையையும் அவர்களால் தீர்மானிக்க முடியும். இதனால் பொருட்கள் சேவைகளை பெற பாரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மீளவும் சந்தையின் போக்கை மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். மக்களுக்கு நியாயமான முறையில் பொருட்கள் சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதனை அரசாங்கம் மீற முடியாது. போட்டித்தன்மை ஊடாக இதனை செய்ய முடியும். விலைகளை நிர்ணயிக்கலாம். ஆனாலும் சில துறைகளை மேற்பார்வை ஊடாக கையாளலாம். பாராளுமன்றத்தின் ஊடாக நிர்ணயச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சந்தைகளிலுள்ள திரிபுநிலையை சீர் செய்ய அவை போதுமானதா. அது தொடர்பான சட்டங்கள் போதுமானதா என பார்க்க வேண்டும். சில துறைகளை நாம் கையாள வேண்டும். சில துறைகள் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை. அவை அரச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். வலுசக்தி சந்தையை கையாளுகையில் அரசின் பங்கும் இருக்க வேண்டும். அவை பொருளாதாரத்தில் முக்கியமானவை. இவற்றில் ஏற்படும் சில தடுமாற்றங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

எனவே அவ்வாறான துறைகளிலும் அரசாங்கத்தின் வகிபாகம் ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் அறிந்துள்ளோம்.

அதே போன்று நிதித்துறை சுதந்திரமாக செயற்பட ஆரம்பித்தால் என்ன நடக்கும். மத்திய வங்கி மேற்பார்வை நிறுவனமாக செயற்படுகிறது. நிதிச் சந்தையிலும் அரச வகிபாகம் இருக்க வேண்டும்.

அடுத்து பரவலடைந்து காணப்படும் சந்தைகளுக்கு பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக கூட்டுறவுச் அமைப்பை வலுவானதாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். சந்தையில் பலமான போட்டியாலராக கூட்டுறவுத்துறையை பயன்படுத்த இருக்கிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவதற்காக சில துறைகளை அடையாளங் கண்டுள்ளோம். சுற்றுலாத் துறையில் பெரும் பாய்ச்சலை செய்யக்கூடிய இயலுமை தொடர்பில் அறிந்துள்ளோம். அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் 8 பில்லியன் டொலர் பெறுமதியான சுற்றுலா பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கும் எதிர்பார்த்திருக்கிறோம். 2018 இல் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

அடுத்ததாக தகவல் தொடர்பாடல் துறை உலகின் அனைத்து தொழில் துறைகளிலும் தாக்கம் செலுத்துகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்கள் நாட்டுக்கு அவசியம். தற்போது எமது நாட்டில் 85 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப தொழில்துறையினர் மாத்திரமே உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை 5 வருடங்களில் 2 இலட்சமாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். தகவல் தொழில்நுட்பத்துறை ஏற்றுமதி வருமானம் குறைவாகவே உள்ளது. 5 பில்லியன் டொலர் வருமானத்தை பெறும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஐந்து துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அதற்காக கல்வி, மொழி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்.

இன்றும் உலக துறைமுகங்களின் வரிசையில் கொழும்பு துறைமுகம் முன்னணி வகிக்கிறது. அமைவிடத்தின் வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பலமான வர்த்தக கப்பல்துறை மத்திய நிலையமாக அதனை மாற்ற வேண்டும். சேவைப் பெறுநர்களுக்கு உரிய வகையில் சேவை கிடைக்கிறதா என்ற கேள்வி உள்ளது. எமது துறைமுகங்களின் இயற்கை அமைவிடமே எமது வலுவாகும். அதனால் எமது துறைமுகத்தை வலுவான பொருளாதார மையமாக மாற்றியமைப்பதற்கான பாரிய திட்டம் உள்ளது.

நாட்டில் மிகப்பெரிய விவசாய துறை இருந்தாலும் கடனாளிகளான விவசாயிகளே இன்று நாட்டில் இருக்கின்றனர். விவசாய துறைக்காக நாம் பெருமளவில் முதலீடு செய்திருக்கிறோம். விவசாயத்துறை ஆய்வுகளுக்கு அதிக நிதி செலவிடப்படுகிறது. ஆனால் விவசாயிகள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். சுகாதாரம், கல்வி, இருப்பிடம் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, வறுமையின் பிடியிலும் சிக்கித் தவிக்கின்றமை பாரிய சமூக பிரச்சினையாகும். விவசாயத்துறை சார் வறுமை பாரிய சமூக அவலமாக மாறியுள்ளது. எனவே, விவசாய துறையிலும் பெரும் பாய்ச்சலை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்காக விதை உற்பத்தி நிலையங்களை மீள ஆரம்பிக்க வேண்டியது அவசியம். விவசாய சேவை நிலையங்களை வலுவூட்ட வேண்டும். இலங்கைக்குள் மாத்திரமின்றி, ஏற்றுமதியை இலக்கு வைத்த விவசாய உற்பத்திகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, விவசாயத்துறையில் பாரிய பாய்ச்சலை மேற்கொள்வோம். விவசாயத்தை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பகுதியாக மாற்றியமைக்க வேண்டும்.





ஹெக்டயாருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்ட பசளை நிவாரணத்தை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளோம். மேலும் நிவாணம் வழங்க வேண்டிய துறைகளுக்கு வழங்க இருக்கிறோம்.

அதேபோல், மீன்பிடித்துறையை பலப்படுத்த வேண்டும். எரிபொருள் பிரச்சினையால் படகுகள் கரைகளில் கிடந்தன. படகுகளை மீள கடலுக்கு அனுப்புவதற்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். தற்பொழுது அமைவ கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன. அதற்கான எமது நீரியல் வளங்களை பெறுமதிசேர் வளங்களாக மாற்றியமைக்கும் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தியிருக்கிறோம்.

கனிய வளங்களை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். தனியார் துறையினரையும் அந்த பணியில் கைகோர்த்துக்கொள்வோம். அது எமது பொருளாதாரத்தில் புதிய திருப்பு முனையாக அமையும் என்று நம்புகிறோம்.

அடுத்ததாக, விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் துறை. உலகின் வளர்ச்சி கண்ட அனைத்து நாடுகளும் புதிய கண்டுபிடிப்புக்கான ஆய்விற்காக பெருமளவான நிதியை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்குகின்றன. புதிய உற்பத்தி மற்றும் விநியோகச் சேவைகளினால் மாத்திரமே புதிய சந்தை உருவாகும். எனவே விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் மூலமும் மிகப்பெரிய பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். ஆசியாவில் பல நாடுகள் இந்தத் துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன. இது சார்ந்த புதிய சந்தையில் பங்காளராக நாம் தவறிவிட்டோம். சம்பிரதாய முறைகளிலே தொடர்ந்து இருக்கிறோம். அந்த துறைசார் முக்கியஸ்தர்கள் பலரும் அதற்கான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். இந்தத் துறையில் பாரிய முன்னெற்றத்தை எட்ட எதிர்பார்க்கிறோம்.

டிஜிட்டல் மயமக்கல் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்திற்கு பங்களிக்க ஹான்ஸ் விஜேசூரிய முன்வந்துள்ளார். நாட்டை முன்னேற்றுவதில் டிஜிட்டல்மயமாக்கல் முக்கியமானது. அந்த இலக்குகளை அடைந்துகொள்ள அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றும்.

அவரை அந்த அமைச்சின் செயலாளராகவும், ICT நிறுவனத்தின் தலைவராகவும், டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராகவும் நியமிக்க நான் தயாராக இருக்கிறேன். இதை ஒரே இடத்தில் இருந்து இயக்க வேண்டும். பொருளாதாரத்தை ஒரு புதிய கட்டத்திற்கு கொண்டுச் செல்வதிலும் மக்களுக்கு சேவைகளை வழங்குவதிலும் டிஜிட்டல் மயமாக்கல் மிக முக்கியமானது.

எமது நாடு தற்போதைய நிலையில், இருந்து புதிய நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமாயின், அந்த அந்த உயர் நிலை “டிஜிட்டல் ஸ்ரீலங்கா” ஆக அமைய வேண்டும். அதற்காக அரசாங்கம் முழுமையான அரப்பணிப்புடன் செயலாற்றும். அதன் வெற்றிக்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கையும் எமக்கு இருக்கிறது.

அடுத்த பிரதான திட்டமா *cleaning sri lanka* வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். குறிப்பாக, தூய்மையான இலங்கை என்பது சுற்றுச்சூழல் அமைப்பை மட்டும் குறிக்கவில்லை. மக்கள் அரசியல் அதிகாரத்தில் சாதகமான மாற்றங்களை கொண்டு வர முடியும்.

அரசாங்க அதிகாரிகள் அமைப்பில் நல்ல மாற்றங்களைச் செய்யலாம். ஆனால், ஒரு நல்ல அரசை கட்டியெழுப்புவதற்கு மக்களிலும் நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும். மக்களில் ஒரு நல்ல மாற்றம் இல்லாமல், மேலே இருக்கும் அரசியல் அதிகாரத்தை மாற்றுவதால் மாத்திரம் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது. அதனால்தான் நல்ல பிரஜைகள், நல்ல மனப்பான்மை, நல்ல செயல்பாடுகள் மற்றும் நல்ல நடத்தை கொண்ட மக்களை உருவாக்க வேண்டும்.

அதுவே தூய்மையான இலங்கை எனும் வேலைத்திட்டத்தின் நோக்கங்களாக அமைகின்றது. குறிப்பாக இப்படி ஒரு தேசிய சபையில் விவாதிக்கக் கூடாத, பிரதேச சபை மட்டத்திலான பிரச்சினையாக இருந்தாலும், நம் நாட்டுப் பெண்கள் கழிப்பறைக்குச் செல்ல இந்த நாட்டில் சுத்தமான கழிப்பறை அமைப்பு இருக்கிறதா என்பதும் கேள்விக்குரியாகும், தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் சில பெண்கள் வீடு வரும் வரை தண்ணீர் அருந்துவதில்லை. சுத்தமான கழிப்பறை கட்டமைப்பொன்று இல்லாமையே அதற்கு காரணமாகும்.

கழிப்பறை கட்டமைப்பு கட்டப்பட்டாலும், சமூகத்தில் நல்ல மனப்பான்மை கட்டியெழுப்பப்படவில்லை. சாதாரண மக்களுக்கு பொது இடமாக அன்றி அவை அழிவுகரமான இடமாக மாறியுள்ளன. இதனால் என்ன தெரிகிறது? இது எமது நாட்டு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவிடம் காணப்படுகின்ற அணுகுமுறையாகும். எனவே, தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் ஊடாக அவ்வாறான மனோபாவத்தையும் மாற்ற எதிர்பார்க்கின்றோம்.

சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரஜையாக மாறுவது எவ்வாறு? இப்போது மட்டும் வாழ்ந்து களிப்பது எவ்வாறு இன்று சிந்திக்காமல் நம் எதிர்கால சந்ததியினருக்காக நம் நாட்டின் வளங்களை எவ்வாறு பாதுகாப்பது, சாரதி என்ற வகையில் நாம் எவ்வாறு வீதியில் வாகனத்தை செலுத்துவது?

நாம் எப்படி பாதைகளை கடப்பது? நாம் ஒரு இடத்தில் நுழையும்போது, நாம் எப்படி மற்றவர்களை மரியாதையுடன் வரவேற்க முடியும்? இவ்வாறானதொரு சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது. ஒருவரை ஒருவர் பற்றி கவலைப்படாத சமூகம். ஒன்றுக்கொன்று முரண்பட்ட சமூகமே இன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஒரு சிறிய சம்பவம் மோதலை நோக்கி நகர்த்தப்படுகிறது. பொறுமை இல்லை, மற்றவரை மன்னிக்கும் மனப்பாங்கு இல்லை. மற்றவரை இழிவாகப் பார்க்கும் சமூகம் என்று ஒட்டுமொத்த சமுதாயமும் வறண்ட சமுதாயமாக மாறியுள்ளது.

எனவே, இப்படியொரு சமுதாயத்திற்கு ஈரம் தேவை. வறண்ட முகங்கள், கடுமையான முகம் என்பவற்றோடு சமுதாயம் முன்னேற முடியுமா? புன்னகைக்கும் சமுதாயம் வேண்டும். பிறரை கருணையுடன் நடத்தும் சமுதாயம் வேண்டும். மனிதநேயப் பண்புகள் நிறைந்த சமுதாயம் தேவை. பிறர் துன்பத்தில் கருணை காட்டும் சமுதாயம் வேண்டும்.



குறிப்பாக, நமது நாட்டின் கல்வி, இலக்கியம், சட்டம், கலாசாரம் ஆகியவற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கிறோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த சமூகத்தில் மிகவும் உயர்வான மற்றும் தரமான சமுதாயத்தை உருவாக்கும்.

வறுமை ஒழிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரஜைக்கும் நியாயமான உணவு வேளை, பிள்ளைகளுக்கு நல்ல கல்வி, வாழும் வீடு, நல்ல வருமானம் மற்றும் மன சுதந்திரம் ஆகியவற்றை விரும்புகிறார்கள் அல்லவா? குறிப்பாக, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமையை ஒழிப்பது அரசின் முக்கிய பணியாக உள்ளது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்பமாக தற்போது வழங்கப்படும் அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் பாடசாலை மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒக்டோபர் மாதம் முதல் ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவு அதிகரிக்கப்படும். எதிர்வரும் பட்ஜெட்டில் அரச ஊழியர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படும்.

குழந்தைகளின் போஷாக்கு குறைபாடு எதிர்கால சமூகப் பேரழிவாக மாறக்கூடும். எனவே, பிள்ளைகளின் ஊட்டச் சத்து குறைபாட்டைக் போக்க அந்த வறிய குடும்பங்களுக்கு உதவிக் கொடுப்பனவுகளை வழங்கவும் எதிர்பார்க்கிறோம். கர்ப்பிணித் தாய்மார்களைப் பாதுகாக்க, போஷாக்குள்ள உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும்.

தற்போதைய வறுமையின் காரணமாக பெற முடியாத பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க தீர்மானித்திருக்கிறோம். ஆனால், நீண்டகாலமாக இதனை அரசாங்கத்தினால் செய்ய முடியாது. எந்தவொரு நாட்டிலும் எந்த நேரத்திலும் பொருளாதார ரீதியாக நெருக்கடிக்கு உள்ளாகக்கூடிய மக்கள் உள்ளனர். பொருளாதாரத்தில் ஈடுபாடு இல்லாத மக்கள் சமூகமும் உள்ளது. உலகின் வளர்ந்த நாடுகளிலும் இப்படிப்பட்ட சமூகம் இருக்கிறது. எனவே, அந்த சமூகத்தை எப்போதும் கவனித்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கைவிட மாட்டோம்.

இலங்கையில் அங்கவீனமானவர்கள் உள்ளனர். அங்கவீனமான குழந்தை உள்ள வீட்டில், அதுவே பிரச்சினையாக மாறுகிறது. அவர்களுக்கு சம்பிரதாய வாழ்வியல் முறை கிடைக்காமல் போகிறது. அந்த குழந்தையின் இயலாமையால் பெற்றோர்கள் மற்றும் உடன்பிறந்தவர்களின் முழு வாழ்க்கையும் அரப்பணிக்க வேண்டியிருக்கிறது. மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களின் நிலை இதுவாகவே இருக்கிறது. எனவே, மாற்றுத்திறனாளிகளை பராமரிக்க விசேட செயன்முறை மற்றும் உதவித்தொகை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எமது அரசாங்கம் அனைத்து மக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தும் அரசாங்கமாகும். மக்களை கைவிடாத அரசாங்கமாக மாற வேண்டும். இது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் பொறுப்பும் கடமையுமாகும். அந்த பொறுப்பை நிறைவேற்றுவோம்.

மேலும், எப்பொழுதும் நிவாரணம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் மட்டும் வறுமை ஒழியும் என்று நாங்கள் நம்பவில்லை. வறுமையை ஒழிக்க, பிரதிபலன்களை பெறக்கூடி பொருளாதார முயற்சிகளில் ஈடுபட வேண்டும். தற்போது, வறுமையில் வாடும் பலரின் முக்கிய வருமான வழிமுறையாக விவசாயமே உள்ளது. விவசாயத்தை இலாபகரமான தொழிலாக மாற்றாமல், வறுமையில் இருந்து மீட்க முடியாது.

மேலும், மீன்பிடி தொழிலை இலாபகரமான தொழிலாக மாற்றாமல் மீனவர்களை வறுமையில் இருந்து விடுவிக்க முடியாது. எனவே, அவர்கள் தற்போது ஈடுபட்டுள்ள பொருளாதார செயற்பாடுகளை வெற்றிகரமானதாகவும் இலாபகரமானதாகவும் மேம்படுத்துவதே எங்களது முதல் முயற்சியாகும். ஆனால் இந்த பொருளாதார மூலதனங்கள் மட்டும் ஒரு கிராமத்திற்கு போதுமானது அல்ல. புதிய பொருளாதார முறைமைகளும் வாய்ப்புகளும் கிராமங்களுக்குள் உருவாக்கப்பட வேண்டும்.

நமது சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பதிலாக, சிறு, நடுத்தர தொழில் முனைவோராக மாற வேண்டும் என்ற எண்ணம் இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு, மூலதனம் மற்றும் சந்தையைக் கண்டறிவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நம் நாட்டில் சந்தை வாய்ப்புகள் போதுமானதாக இல்லை. நமது சந்தையில் 38 இலட்சம் என்ற தொகையே உள்ளனர். இது ஒரு சிறிய சந்தை. இந்த சிறிய சந்தையில் மட்டும் வியாபாரம் செய்து பொருளாதாரத்தில் தொழில் உரிமையாளர்கள், தொழில்முனைவோர், வர்த்தகர்கள் என்று பலமான சமூக கட்டமைப்பை உருவாக்க முடியாது. எனவே, இவர்கள் நாட்டுக்கு வெளியிலிருக்கும் சந்தை வாய்ப்புக்களை தேட வேண்டியது அவசியமாக உள்ளது.

அதன்படி, எங்கள் தூதரகத்தை முழுமையாக மறுசீரமைப்போம். இராஜதந்திர உறவுகள் தொடர்பில் எமக்கு பொறுப்பும் கடமையும் உள்ளது. ஆனால், இந்த இலங்கை உற்பத்தியாளர்களுக்கு புதிய சந்தையை தேடுவது தொடர்பிலான பொறுப்பு உள்ளது. அதற்காக எங்கள் தூதரகங்களை செயற்படுத்துவோம். நமது நாட்டில் மிகவும் தொழில்நுட்பத் திறன்களையும் ஆற்றலையும் கொண்ட ஒரு கட்டுமானத் தொழில் இருக்கிறது. இந்த கட்டுமானத் தொழிலை இலங்கைக்கு வெளியே கொண்டு செல்ல திட்டமிட வேண்டும்.

எங்களிடம் சில தனித்துவமான தயாரிப்புகள் உள்ளன. அந்தப் பொருட்களுக்கு அதிக மதிப்புகள் மற்றும் பெறுமதிகளை சேர்த்து புதிய தொழில்துறை கட்டமைப்பை உருவாக்கி அவற்றை நாட்டிற்கு வெளியே கொண்டு செல்ல வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் தாங்களாகவே முடிவெடுத்து செயல்படுபவர்கள் அல்ல. அரசின் தீர்மானத்தின் அடிப்படையில் சிறு மற்றும் நடுத்தர துறையின் வளர்ச்சியை நாம் அடைய வேண்டும். அதற்கான திட்டங்களை தயாரித்துள்ளோம்.

அது பற்றிய விடயங்களை “வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற விஞ்ஞாபனத்தில் சேர்த்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்தில் தமது அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளை எமது அமைச்சர்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.

விரைவில் பட்ஜெட்டை சமர்ப்பிக்க முடியாதுள்ளது. அடுத்த 04 மாதங்களுக்கு தேவையான நிதியை ஒதுக்குவதற்காக டிசம்பர் மாத தொடக்கத்தில் இடைக்கால கணக்கு அறிக்கையொன்றை சமர்பிப்போம். பெப்ரவரி மாத தொடக்கத்தில் பட்ஜெடை சமர்ப்பித்து, மார்ச் மாதத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

எனவே, இந்த திட்டத்தை நடைமுறை ரீதியான பட்ஜெடில் இணைத்துள்ளோம். தற்போது கருத்தியல் ரீதியாக முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளின் அடிப்படையில், வரவு-செலவுத் திட்ட ஆவணத்தை தயாரித்து, மார்ச் மாத நடுப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம்.

நமது நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் மாற்றத்தின் புதிய யுகம் ஆரம்பித்துள்ளது. இந்த புதிய யுகத்தின் வெற்றிக்கு இந்த பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகளில் பணியாற்றியிருக்கலாம். நாம் எதிர்மறையான கொள்கைகள் இருக்கலாம், கருத்து வேறுபாடுகள் மற்றும் கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபட்டிருக்கலாம், ஆனால் இன்று நாம் அனைவரும் ஒரே இலக்கை நோக்கு செல்ல ஒன்றுபட்டுள்ளோம்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் சிறந்த நாட்டை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அந்த பொறுப்புக்கு நானும் எங்கள் அரசும் கட்டுப்பட்டுள்ளோம். இதற்கு அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களும், எம்.பிக்களும் ஆதரவு தருவார்கள் என நம்புகிறேன்.

இறுதியாக, மார்ட்டின் லூதர் கிங் ஒருமுறை சொன்னார், “இருளை இருளால் விரட்ட முடியாது. ஒளியால் மட்டுமே அதைச் செய்ய முடியும். வெறுப்பால் வெறுப்பை ஒழிக்க முடியாது. அன்பால் மட்டுமே அதைச் செய்ய முடியும்” என்றார்.

ஐரோப்பா

ரஷ்யா–உக்ரைன் போர் எதிரொலி

# போருக்கு தயாராகும் ஐரோப்பிய நாடுகள்



ஐரோப்பாவில் உள்ள பல்வேறு நாடுகள், தங்கள் மக்களிடம் போருக்கு தயாராக இருக்குமாறு அறிவுறுத்தி வருகிறது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போர் ஆயிரமாவது நாளை கடந்தது. இதனிடையே ஸ்வீடன், பின்லாந்து, நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் தங்களது நாட்டினருக்கு ஆபத்து காலத்தில் எப்படி தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பாக ஸ்வீடன், மில்லியன் கணக்கான துண்டுப் பிரசுரங்களை அனுப்பத் தொடங்கியுள்ளது. அவற்றில் போர், இயற்கை பேரழிவுகள் மற்றும் சைபர் அல்லது பயங்கரவாத தாக்குதல்களுக்கு எவ்வாறு தயார்ப்படுத்திக் கொள்வது என்பது பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பின்லாந்து பல்வேறு நெருக்கடிகளுக்கான தயார்நிலை குறித்த தகவல்களைச் சேகரிக்கும் வலைத்தளமொன்றைத் தொடங்கியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலைத் தொடர்ந்த பிறகு, பின்லாந்து 200 கிலோ மீற்றர் எல்லைப் பகுதி வேலியை 10 அடி உயரம் மற்றும் முட்கம்பிகளால் கட்டும் திட்டத்தை அறிவித்தது. இந்த திட்டம் 2026ஆம் ஆண்டு முடிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




உக்ரைன்

அணு ஆயுத தாக்குதல் அச்சம்

## அமெரிக்க தூதுரகத்துக்கு பூட்டு

உக்ரைன் தலைநகர் கீவ்வில் உள்ள அமெரிக்க தூதுரகம் தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்து ஆயிரம் நாட்களைக் கடந்துள்ளது. ரஷ்யாவை எதிர்த்து போரிடும் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. ரஷ்யாவுடன் இணைந்து வடகொரியப் படைகள் தாக்க உள்ளதால், தொலைதூரத்தில் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்க அரசு அனுமதி அளித்தது.

இதனால் அதிபர் புட்டின், ரஷ்ய படைகள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி கொடுத்துள்ளதால் போர் தீவிரமடைந்துள்ளது.

எந்நேரமும் உக்ரைனில் அணு ஆயுத தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் அங்குள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

அமெரிக்கா

## தொழிலதிபர் அதானிக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு



இந்தியாவின் பிரபல தொழிலதிபர் கௌதம் அதானி முறைகேட்டில் ஈடுபட்டதாக அமெரிக்காவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சூரிய மின்சாரம் விநியோகம் தொடர்பான முதலீடுகளைப் பெற அமெரிக்க அதிகாரிகளுக்கு 25 கோடி டொலர்களுக்கு மேல் இலஞ்சமாகக் கொடுக்க ஒப்புக்கொண்டதாக அதானி மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனினும், தனது தவறை அமெரிக்க முதலீட்டாளர்களிடம் மறைத்து, அதானி தனது திட்டத்திற்காக பெரும் தொகையைத் திரட்டினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து நியூயோர்க் பெடரல் நீதிமன்றத்தில், அமெரிக்கா வழக்கு ஒன்று தொடர்ந்துள்ளது.


அதானியின் உறவினர் சாகர் அதானி, வினீத் ஜெயின் உள்ளிட்ட 6 பேர் மீதும் அமெரிக்கா புகார் அளித்துள்ளது.

இதே புகாரில் அமெரிக்கா பங்கு பரிவர்த்தனை ஆணையமும் அதானி மீது வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த குற்றச்சாட்டு குறித்து அதானியோ, இந்திய தூதரகமோ இதுவரை விளக்கம் அளிக்கவில்லை.

உத்திரப் பிரதேசம்

வைத்தியசாலையில் தீ விபத்து

# பலியான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



உத்தரப் பிரதேச மாநிலம் ஜான்சி மாவட்டத்தில் மகாராணி லட்சுமிபாய் மருத்துவக்கல்லூரி வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியான குழந்தைகள் எண்ணிக்கை 15ஆக உயர்ந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு பிரிவில், கடந்த வெள்ளிக்கிழமை(15), தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தில் மூச்சுத்திணறல், தீக்காயங்களால் 10 குழந்தைகள் உயிரிழந்தன. மேலும், 39 குழந்தைகள் காயங்களுடன் மீட்கப்பட்டன. இதில் சில குழந்தைகளுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், தீ விபத்தில் காயமடைந்த குழந்தைகளில் மேலும் 5 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

இதனால் இந்த தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.

புதுடெல்லி

அபாய கட்டத்தில் காற்று மாசு

# வீட்டிலிருந்து வேலை திட்டம் அமுல்



காற்று மாசின் அளவு அபாய கட்டத்தைத் தாண்டியுள்ளதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அலுவலகங்களில் பணியாற்றும் அரச, தனியார் ஊழியர்களில் 50 சதவீதமானோர், வீட்டில் இருந்தே பணிபுரியுமாறு, டெல்லி அரசு உத்தரவிட்டுள்ளது.

வாகன போக்குவரத்து, கட்டுமான நடவடிக்கை, பயிர் கழிவுகளை எரிப்பது போன்றவற்றின் காரணமாக, கடந்த சில மாதங்களாக டெல்லியில் காற்று மாசின் அளவு அபாய நிலையில் காணப்படுகிறது.

இதனால், அங்குள்ள மக்கள் மூச்சுவிடுவதற்கே சிரமப்படும் நிலை காணப்படுகிறது. இந்த நிலையில், மாசை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாகன பயன்பாட்டைக் குறைக்கும் வகையில், அரசுப் பணியில் உள்ள 50 சதவீதமானோரை வீட்டில் இருந்தே பணியாற்றும்படி டெல்லி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தனியார் நிறுவனங்களும் இதே முறையை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், அத்தியாவசி சேவைகளில், தொடர்ந்து முழு பணியாளர் திறனில் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா இந்தியா?

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது பேர்த்தில் வெள்ளிக்கிழமை (22) காலை 7.50 மணிக்கு தொடங்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

நியூசிலாந்துடனான தொடரில் வெள்ளையடிக்கப்பட்ட பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு தகுதி பெறுவதற்கு இத்தொடரின் நான்கு போட்டிகளில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இந்தியா களமிறங்குகிறது.

மறுபக்கமாக கடந்த இரண்டு முறையும் இந்தியாவிடம் தொடரைப் பறிகொடுத்த அவுஸ்திரேலியா அதற்கு பழி தீர்க்கும் நோக்கில் களமிறங்குகின்றது.

இப்போட்டிக்கான ஆடுகளமானது பழைய பேர்த் ஆடுகளங்களைப் போல வேகமானதாகவும், எகிறி வரும் பவுண்ஸ்களையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இம்மைதானதில் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர்களை விட நேதன் லையன் சிறப்பாக பெறுதிகளைக் கொண்டிருக்கும் நிலையில் இரவிச்சந்திரன் அஷ்வினும் அவதானிக்கப்படுவார்.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் றோஹித் ஷர்மாவுக்குப் பதில் லோகேஷ் ராகுல் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுவதுடன், மூன்றாமிடத்தில் தேவ்டுட் படிக்கல் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தவிர ஆறாமிடத்தில் துருவ் ஜுரேலும், ஏழாமிடத்தில் நிதிஷ்குமார் ரெட்டியும் தொடர்ந்து அஷ்வின் அதையடுத்து ஹர்ஷித் ரான, ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ் களமிறங்குவரென எதிர்பார்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் மிற்செல் மார்ஷ் பந்துவீசுவாரென உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மர்னுஸ் லபுஷைனும் பணிச்சுமையை பகிர்ந்து கொள்வாரெனத் தெரிகிறது.



மேற்கிந்தியத் தீவுகள் எதிர் பங்களாதேஷ்

# இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்


மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது அன்டிகுவாவில் வெள்ளிக்கிழமை (22) 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் தொடங்குகின்றது.

பங்களாதேஷைப் பொறுத்தவரையில் அணித்தலைவர் மெஹிடி ஹஸன் மிராஸ் மற்றும் சிரேஷ்ட வீரர்களான லிட்டன் தாஸ், மொமினுல் ஹக், தஜியுல் இஸ்லாம், தஸ்கின் அஹ்மட்டின் பெறுபேறுகளிலேயே அவர்களின் வெற்றி வாய்ப்புத் தங்கியுள்ளது.

இதேவேளை, ஹஸன் மஹ்மூட், நஹிட் ரானா ஆகியோரும் மேற்கிந்தியத் தீவுகளை யோசிக்க வைப்பரென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்த வரையில் கேமார் றோச், அல்ஸாரி ஜோசப்பின் மீள்வருகையானது ஷாமர் ஜோசப், ஜேடன் சியல்ஸை பலப்படுத்துவர். துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட்டில் அதிக எதிர்பார்ப்பு காணப்படுவதோடு, அலிக் அதனஸே, கேசி காட்டியிடம் இருந்தும் பங்களிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

# கிறிஸ்டென்சன் வெளியேறுகிறார்?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் பின்களவீரரான அன்ட்றியாஸ் கிறிஸ்டென்சன் அக்கழகத்தை விட்டு ஜனவரியில் வெளியேறலாமெனக் குறிப்பிடப்படுகிறது.

பின்களத்தில் வேறு தெரிவுகளும் இருக்கின்ற நிலையில் 28 வயதான கிறிஸ்டென்சனுக்கு அணியில் தொடர்ந்து வாய்ப்புகள் குறித்து உறுதிமொழியை வழங்க முடியுமாவென பார்சிலோனா தெளிவில்லாமலுள்ளது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டுடன் கிறிஸ்டென்சனின் பார்சிலோனாவுடனான ஒப்பந்தம் முடிவடைகின்ற நிலையில் கழகத்தில் இருக்கவே விரும்பிகின்றபோதும், தனது திட்டத்தில் கிறிஸ்டென்சன் இல்லை என பார்சிலோனா முகாமையாளர் ஹன்சி பிளிச் கூறுமிடத்து இதில் மாற்றமிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# யுனைட்டெட் செல்லும் டேவிஸ்?



ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் இடது பின்களவீரரான அல்போன்ஸோ டேவிஸைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்துடன் மியூனிச்சுடனான 24 வயதான டேவிஸின் ஒப்பந்தம் முடிவடைகின்ற நிலையில் ஸ்பானிய லா லிகா கழகங்களான றியல் மட்றிட், பார்சிலோனாவும் அவரைக் குறிவைப்பதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 22 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.